வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 21.12.2023 வியாழக்கிழமை | இதழ் : 353 | பக்கங்கள் : 12

## வடக்கு, கிழக்கு நெல் அறுவடைக்கு தயார்; இந்நேரம் அரிசி இறக்குமதிக்கு அனுமதி!

### இது முறையா என்கிறார் ஹர்ஷ எம். பி.

கொழும்பு, டிசெ. 21

வடக்கு, கிழக்கில் விவசாயிகள் பெரும்போக அறுவடைக்கு காத்திருக்கும் தருணத்தில் அரிசியை இறக்குமதி செய்வது முறையான விடயமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா.

அத்துடன், அரிசி இறக்குமதிக்கான அனுமதியில் சந்தேகம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்தார்.

கீரி சம்பாவுக்கு பதிலாக 50 ஆயிரம் மெற்றிக் தொன் ஜீ. ஆர் 11 வகை அரிசி இறக்குமதி செய்வ



தற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. பண்டிகைக் காலத்தில் அரிசியை கொண்டு

11

## தமிழக மீனவர்கள் எண்மர் விடுதலை

மன்னார், டிசெ. 21

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் எட்டு பேரை நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்ய மன்னார் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் 6 ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் எட்டு பேரை இலங்கை கடற்படையினர்

11

## மாணவரை இலக்கு வைத்து போதைப்பொருள் விநியோகம்!

### யாழ்ப்பாணத்தில் ஆறு பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணம் - கொக்குவில் பிரதேசத்தில் பிரபல பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்த ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'வட்ஸ் அப்' செயலி ஊடாக தொடர்பை ஏற்படுத்தி இவ்வாறு விற்பனை செய்து வந்த 6 சந்தேகநபர்கள் நேற்று மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தெய்வநாயகம் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் இருவரை மூன்று நாட்களுக்கு

11

# நாட்டில் சட்டவாட்சியை ரணில் வெற்றிகரமாக அமுலாக்கினார்



## மகிந்த ராஜபக்ஷ புகழாரம்

கொழும்பு, டிசெம்பர் 21

**நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டு வெற்றிகரமாக சட்டத்தின் ஆட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப்படுத்தியுள்ளார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சட்டத்தை வெற்றிகரமாக மீட்டெடுத்துள்ளார். அடுத்த தேசிய தேர்தல் வரை நிலையான அரசாங்கத்தை

11

## யாழ். - மன்னார் வீதி போக்குவரத்து பாதிப்பு



கிளிநொச்சி, டிசெ. 21

பல்லவராயன் கட்டுக்குளம் உடைப்பெடுத்ததால் யாழ்ப்பாணம் - மன்னார் (ஏ-32) வீதியையும் குறுக்கறுத்து வெள்ளம் பாய்கிறது. இதனால், நேற்று இந்த வீதி ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

11

## அடுத்த தேர்தலில் ரணிலுக்கே ஆதரவு

### மொட்டுக் கட்சி எம். பி.

கொழும்பு, டிசெ. 21

"அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிட வேண்டும். அவருக்கு நான் நிச்சயம் ஆதரவு வழங்குவேன்."

- என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

11

## தீர்வு இல்லாவிட்டால் தொடர் போராட்டம்!

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 21

சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டால் ஜனவரி முதலாம் திகதி முதல் கடுமையான தொழில்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

11

## பொதுஜன பெரமுனவின் பட்டியலில் தம்மிக பெரேரா

கொழும்பு, டிசெ. 21

பொதுஜன பெரமுன கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நான்கு பேர் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அவர்களில் தம்மிக பெரேராவும் உள்ளடங்குகிறார் எனவும் கட்சியின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

11

## 2024 இலங்கை பொருளாதாரம் 3 வீதத்தால் வளர்ச்சி அடையும்!

### மத்திய வங்கி ஆளுநர் கணிப்பு

கொழும்பு, டிசெ. 21

2023ஆம் ஆண்டு பொருளாதாரம் வீழ்ச்சியை சந்தித்திருந்தாலும், பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் இதேவேளையில், எதிர்வரும் 2024ஆண்டு 3 வீதம் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதைக்கு திரும்பும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

"நெருக்கடியிலிருந்து வெளியே வந்து சரியான பாதையில் இலங்கை

11

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் நான் பங்கேற்கப்போவதில்லை

### விக்னேஸ்வரன் எம். பி. திட்டவட்டம்



கொழும்பு, டிசெ. 21

ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் தான் பங்கேற்கப் போவதில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

11

## உலக வங்கியிடம் இருந்து மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர்!

கொழும்பு, டிசெ. 21

இலங்கைக்கான தமது நிதியுதவியின் இரண்டாவது தவணையாக உலக வங்கி மேலும் 25 கோடி அமெரிக்க டொலர்களை விடுவித்துள்ளது.

அரசாங்கத்தின் பட்ஜெட்டுக்கு ஆதரவாக 50 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதற்கு கடந்த ஜூன் மாதம் உலக வங்கி அனுமதி வழங்கியிருந்தது.

பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும், வறிய மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்கள் மீதான தாக்கங்களைத் தணிப்பதற்கும் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இந்த நிதி உதவியின்

11

# இப்படியும் நடக்கிறது

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு ரணில் விக்கிரமசிங்க தயாராகிவிட்டாரென்றே இப்போது தெற்கில் பரவலாகப் பேசப்படுகின்றது.

கடந்த வாரம் நடந்து முடிந்த பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் பல விடயங்கள் குறித்து அறிவிப்புகள் வெளியிடப்படலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், எதிர்பார்க்கப்பட்டதுபோல எதுவும் நடக்கவில்லை. அதிலும் குறிப்பாக, ஜனாதிபதி தேர்தல் குறித்து அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் கட்சியிலுள்ள சிலர் நம்பியிருந்தனர்.

கட்சி மாநாடு நடைபெறுவதற்கு முதல்நாள் நடைபெற்ற கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மகிந்தானந்த அளுத்கமவின் புதல்வரின் திருமண வைபத்தில் கலந்து கொண்ட தலைவர்கள்கூட அப்படியொரு நம்பிக்கையை கொண்டிருந்ததை அங்கு சென்றிருந்த ஒருவர் ஊர்ஜிதப் படுத்தியிருந்தார்.

ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. மாறாக கட்சியின் தலைவராக மகிந்த ராஜபக்ஷ தொடர்வார் என்ற அறிவிப்புடன் மாநாடு முடிவடைந்தபோதிலும் அடுத்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் மகிந்தவிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், அவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது முழு ஆதரவையும் தெரிவித்திருப்பதாகவும் அந்தக் கட்சிக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரிய வந்திருக்கின்றது.

கட்சியின் வேட்பாளராக பிரபல தொழில்அதிபரும் தற்போதைய பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் எம். பியுமான தம்மிக பெரேராவை நிறுத்த வேண்டும் என்று சிலர், குறிப்பாக கட்சியின் 'மூளை'யாக செயல்பட்ட பஸில் ராஜபக்ஷ விரும்பியபோதிலும் அதனை ஏற்றுக்கொள்ள மகிந்த தரப்பு முற்றாக மறுத்துவிட்டதாகவும் சில தகவல்கள் தெரிவித்தன. அதன் பின்னணியில் தான், மாநாடு முடிந்ததும் அவர் அமெரிக்கா சென்றாரா என்பதை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

மகிந்த தரப்பின் உறுதியான முடிவுக்காக காத்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் பணிகளை ஆரம்பித்துவிட்டதாக இப்போது தெரியவந்தது. அதற்காக தனது பணியாட்களின் பிரதானியான சாகல ரத்நாயக்காவை தேர்தல் பரப்புரை பொறுப்பாளராக நியமித்திருக்கிறார் என்றும் பணியாட்களின் பிரதானியாக நிஹால் ரணசிங்கவை நியமிக்கவிருப்பதாகவும் தெரியவருகின்றது. தேர்தல் பிரசாரத்தை நிர்வகிப்பதற்காக அவர், செஹான் சேமசிங்க, காஞ்சன வீரசேகர, திலும் அமுனுகம, ரவி கருணாநாயக்க ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றையும் நியமித்திருக்கிறார்.

இதேவேளை, அவருக்கு ஆதரவளிப்பதற்காகவே பொதுஜன பெரமுனவிலிருந்து தனித்து இயங்கி வரும் நிமல் லான்ச தலைமையிலான குழுவினரும் ஜனவரி முதல் வாரத்திலிருந்து பிரசாரத்தை தொடங்கவிருக்கின்றனர். இந்தக் குழுவில் தற்போது நாற்பத்தி எட்டு எம்.பிக்கள் இருக்கின்றனரென நிமால் லான்ச அண்மையில், பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தபோதிலும் அவர்கள் யார் யார் என்ற விபரங்களை அவர் தெரிவிக்கவில்லை. இதனால் அவர் சொல்வது போல நாற்பத்தி எட்டு எம். பிக்கள் அவருடன் இருக்கின்றனரா என்பது தெரியவில்லை. ஆனால், அவர்கள் அனைவரும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கின்றனர் என்றே கூறப்படுகின்றது.

அவர் ஜனாதிபதியாக இருந்தபோது அவரது அந்தரங்க செயலாளராக இருந்த, சுகீஸ்வர என்பவரே இவர்களை ஒருங்கமைப்பதில் முக்கிய பங்காற்றி வருகின்றார் என்று கூறப்படுகின்றது. இதைவிட முக்கிய திருப்பமாக, ஐக்கிய மக்கள் சக்தியில் தானே ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடப்போவதாக பகிரங்கமாக அறிவித்து வந்த சரத் பொன்சேகா தற்போது ரணிலின் பக்கம் தாவியிருக்கிறார் எனவும் மற்றுமொரு தகவல் தெரிவித்தபோதிலும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. மகிந்த தரப்பு ரணிலுக்கு ஆதரவு அளிக்க முன்வந்துள்ள இந்தத் தருணத்தில் சரத் பொன்சேகா அவர்களுடன் இணைந்து பணியாற்ற சம்மதித்திருப்பாரா என்பது தெரியவில்லை. 'அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா' என்று நம்ம கவுண்டமணி சொன்னதுதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

இதுகாலவரை பொருளாதாரத்தை மீட்டெடுப்பதுதான் தனது முதலாவது பணி என்று கூறிக்கொண்டு தேர்தல் தொடர்பாக எதுவித அறிவிப்பையும் விடுக்காமல் இருந்துவந்த ரணில் விக்கிரமசிங்க, தனது தேர்தல் பணிக்கான விடயங்களை ஏற்பாடு செய்து முடித்து விட்ட பின்னரே முறையான அறிவிப்பை விடுப்பார் என்று நம்பப்படுகின்றது. அநேகமாக அடுத்தமாதம் நடுப்பகுதியில் அவரது அறிவிப்பு வெளிவரலாம் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

- ஊர்க்குருவி.

# உயர்தர மாணவர்களுக்கு ரூ. 6,000 புலமைப்பரிசில்

## விண்ணப்பதற்கு நாளையே கடைசி தினம்

கொழும்பு, டிசெ. 21

உயர்தர மாணவர்களுக்கான ஜனாதிபதி நிதியத்தின் புலமைப்பரிசில்கள் வழங்கும் திட்டத்தின் பாடசாலைகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது நாளையுடன் முடிவடைகிறது.

இம்முறை க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பணிப்புரைக்கு அமைவாக கடந்த வருடமும் இவ்வருடமும் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் டிசெம்பர் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

நாட்டின் 100 கல்வி வலயங்களையும் உள்ளடக்கும் வகையில், ஒவ்வொரு வலயத்திலிருந்தும் 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, 5 ஆயிரம் மாணவர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

2022 (2023)ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு முதல்முறையாகத் தோன்றி, பரீட்சையில் சித்தி பெற்று, உயர்தரம் கற்கத் தகுதிபெற்று, அரச பாடசாலையிலோ அல்லது கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலையிலோ கல்வி பயிலும், விண்ணப்பதாரரின் குடும்பத்தின் மாத வருமானம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறைவாக காணப்படுகின்றமை இந்த புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகுதியாகக் கருதப்படுகிறது.

இந்த புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் அது தொடர்பான விபரங்களை ஜனாதிபதி செயலகத்தின் இணையத்தளங்கள்: presidentsoffice.gov.lk, ஜனாதிபதி நிதியம்: presidentsfund.gov.lk மற்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு: pmd.gov.lk ஆகியவற்றுக்கு சென்று பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்த பின், குறித்த மாணவர்கள் நாளைக்கு முன், தாங்கள் பரீட்சை எழுதிய பாடசலை அதிபரிடம் விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டும்.

செல்லுபடியாகும் காலம் மீண்டும் நீட்டிக்கப்படாது என எதிர்பார்க்கப்படுவதால் தகுதியுடைய சகல மாணவர்களும் நாளைக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி நிதியம் கேட்டுள்ளது. (அ)

# இரணைமடு குளத்தை பார்வையிட்ட டக்ளஸ்



கிளிநொச்சி, டிசெ. 21

கிளிநொச்சிப் பகுதிக்கு நேற்று சென்ற கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரணைமடுக் குளத்தையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது பெய்துவரும் தொடர் மழை காரணமாக இரணைமடு குளத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ள நிலையில் தொடர்ந்தும் நீரினை வெளியேற்றும் வகையில் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

அனர்த்த நிலைமைகளை தடுக்கும் வகையில் ஏதுவான நிலையினை ஆராயும் நோக்கோடு இரணைமடுவுக்கு களப் பயணம் செய்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்குள்ள நிலைமைகளை பார்வையிட்டதோடு நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளோடு கலந்துரையாடலையும் நடத்தினார்.

(அ)

# யாழ். மாவட்ட செயலகத்தில் ஒளிவிழா




யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்து பிறப்பின் ஒளிவிழா நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில், யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன் புரிச் சங்கத் தலைவர் இ.சுரேந்திரன் தலைமையில் நடை பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் கலந்துகொண்டதுடன், கிறிஸ்து பிறப்பின் மகிமையில் நாம் எதனை பின்பற்றுகின்றோம் என்பதனைப் பற்றி உரையாற்றினார்.

இதன்போது கிறிஸ்து பிறப்பு வாழ்த்துச் செய்தி, கிறிஸ்மஸ் ஆடல் பாடல், சிறார்களின் ஆடல் பாடல்கள் என்பன இடம்பெற்றன.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாண மாவட்ட செயலக உள்ளக கணக்காய்வாளர் ம.கமலரூபன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். (அ)

# யாழ். போதனாவில் மீண்டும் பாஸ் முறை

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிகரித்த பார்வையாளர்கள் காரணமாக போக்குவரத்து நெரிசல்கள், திருட்டுச் சம்பவங்கள், நோய்த் தொற்றுக்கள், நோயாளர் பராமரிப்பில் இடையூறுகள் என்பன ஏற்படுவதன் காரணமாக கடந்த செவ்வாய்கிழமை தொடக்கம் பார்வையாளர் அனுமதிப்பத்திரம் (பாஸ்) மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது ஒரு நோயாளருக்கு தலா இரு அனுமதிப்பத்திரங்கள் எனும் அடிப்படையில் நோயாளரை அனுமதிக்கும் பகுதியில் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும். (அ)

## யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் – கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu
21.12.2023 வியாகழக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலில் ஓய்வு பெறும் வயது

தமிழரசு கட்சியின் தலைமைக்கான போட்டி தீவிரம் அடைந்திருக்கின்றது. மும்முனை போட்டி என்று கூறிக்கொண்டாலும்கூட, கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் பிரசாரங்களை தீவிரப்படுத்தியிருக்கின்றனர். இவ்வாறான பிரசார கூட்டங்களின் போது, எம். ஏ. சுமந்திரன் ஒரு தகவலை வெளியிட்டிருக்கின்றார். தான் 65 வயதுக்கு மேல் அரசியலில் பதவியில் இருக்கப்போவதில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஒருவர் வெளிப்படையாக அரசியலில் இருந்து ஓய்வு பெறும் வயதெல்லையை அறிவித்திருப்பது இதுதான் முதல் தடவை. தமிழரசு கட்சியின் அரசியல் பாரம்பரியத்தில் ஒருவர் சக்கரநாற்காலியில் இருக்கும்போதுகூட, பதவிகளிலிருந்து ஒதுங்கும் வழக்கம் ஒருபோதும் இருந்ததில்லை. செல்வநாயகம் காலம் தொடக்கம் சம்பந்தன் காலம் வரையில் இதுதான் வழக்கம். இவ்வாறானதொரு பின்புலத்தில் அந்தப் பாரம்பரியத்தை மாற்றியமைக்கப் போவதாக சுமந்திரன் கூறுகின்றார்.

பொதுவாக அரசியல்வாதிகள் கூறுவதை நம்பிக்கையுடன் நோக்கும் நிலையில் மக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக மேற்குலக அரசியல் பாரம்பரியத்தில் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களின் அரசியல் தீர்மானங்கள் தோல்வியடைந்தால் - அதன் பின்னர் அவர்கள், தலைமை பொறுப்பில் இருக்க மாட்டார்கள். இதனை ஓர் எழுதப்படாத விதியாகவே வைத்திருக்கின்றனர். ஆனால், நமது தமிழ்த் தேசிய ஜனநாயக அரசியல் பாரம்பரியத்தில் இவ்வாறான நல்ல விடயங்களை தமிழ் மக்கள் ஒருபோதுமே கண்டதில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சுமந்திரன், தனது ஓய்வுக் காலத்தை அறிவித்திருக்கின்றார். சுமந்திரன் கூறுவது போன்று நடைபெற்றால் அது ஆரோக்கியமான விடயம்தான்.

தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் மத்தியில் இரண்டாம்மட்ட தலைமை என்று ஒன்றில்லை. அப்படி இருக்க வேண்டும் என்னும் கரிசனை, தேடல் கதிரைகளில் இருப்போரிடம் இருப்பதில்லை. அவர்களை பொறுத்தவரையில் தாங்கள் இருக்கும் வரையில் தங்களுடைய கதிரைகளுக்கு பிரச்னை வந்துவிடக்கூடாது.

இரா. சம்பந்தனின் அணுகுமுறைகள் இதற்கு சிறந்த உதாரணம். சம்பந்தன் இயங்கு நிலையில் இருந்த காலத்தில், தமிழரசு கட்சியின் இரண்டாம் நிலைத் தலைமை தொடர்பில் அக்கறை செலுத்தவில்லை. தனது நகர்வுகளுக்கு தலை அசைக்கக் கூடியவர்களையே பாதுகாத்தார். இதன் காரணமாகவே திறமையுள்ளவர்களை வெளியிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டவர்கள்தான் தற்போது தமிழரசு கட்சிக்கான அடுத்த தலைமைக்கான போட்டியில் ஈடுபடுகின்றனர்.

தற்போது தமிழரசு கட்சியின் தலைமைக்காக போட்டியிடும் அனைவருமே நீண்டகால அடிப்படையில் கட்சியில் செயல்பட்டு - படிமுறை ரீதியாக கட்சியில் பொறுப்புகளை பெற்று அதனடிப்படையில் தலைமையை நோக்கி வந்தவர்கள் அல்லர். 2009இற்கு பின்னர், தமிழர் அரசியலுக்குள் வந்தவர்கள். இவர்களில் யார் பொருத்தமானவர்கள் என்பதை கட்சியின் உறுப்பினர்களே தீர்மானிக்கக் கூடியவர்கள். போட்டியென்று வருகின்றபோது, ஒவ்வொருவரது பிரதேசம் தொடங்கி கல்விப் பின்புலம் - ஏன் மதம்கூட செல்வாக்குச் செலுத்தலாம். ஆனால், இலங்கை தமிழரசு கட்சியின் பாரம்பரியத்தில் இவ்வாறான போட்டியின் அடிப்படையில் தலைமை தீர்மானிக்கப்பட்ட வரலாறு கட்சிக்கு முற்றிலும் புதிது. இது அடிப்படையில் ஆரோக்கியமானதுமல்ல. தலைமை எப்போதும் திறமையின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்பட வேண்டும்.

இரா. சம்பந்தனின் தவறான தலைமை காரணமாகவே இவ்வாறானதொரு போட்டி இடம்பெறுகின்றது. பொதுவாக தமிழரசு கட்சியில் எழுதப்படாத ஒரு விதி காணப்படுகின்றது. அதாவது, வடக்குக்கு தலைமை என்றால் கிழக்குக்கு பொதுச் செயலாளர். கிழக்குக்கு தலைமை என்றால் வடக்குக்கு செயலாளர். ஆனால், செயலாளர் எப்போதும் தலைவருக்கு விசுவாசமானவராகவே நியமிக்கப்படுவதுண்டு. தேர்தல் முடிவுகளே செயலாளர் யார் என்பதைத் தீர்மானிக்கும். சம்பந்தன காலத்தில், தான் சொல்லும் இடத்தில் கையெழுத்துப் போடக்கூடியவரையே கட்சியின் செயலாளராக நியமித்திருந்தார். இதனைக் கொண்டுதான், கட்சியின் தலைவராக இருந்த மாவை. சேனாதிராசாவுக்கு தெரியாமலேயே தேசிய பட்டியல் ஆசனத்தை வழங்கும் முடிவை எடுத்தார்.

ஆனால், சுமந்திரன் கூறுவது சரியான விடயம்தான். அதாவது, ஒரு குறிப்பிட்ட வயதுக்கு பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கும் - அதாவது பதவிகளிலிருந்து ஒதுங்கும் தீர்மானத்தை ஒவ்வொருவரும் எடுக்க வேண்டும். அப்போதுதான் சமூகத்தில் புதிய தலைவர்கள் உருவாகுவார்கள். அப்போதுதான் சமூகம் புத்தாக்கம்மிக்க தலைமைகளின் கீழ் வழிநடத்தப்படும். ஆனால், அதற்கு யாராவது ஒருவர் முன்னுதாரணமாக நடந்து காட்ட வேண்டும்.

# முன்னாள் சுகாதார அமைச்சர் ஏன் கைதுசெய்யப்படவில்லை?

## கேள்வியெழுப்பினார் நலிந்த ஜயதிஸ்ஸ

*கொழும்பு, டிசெ. 21*

தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசியை செலுத்திய சம்பவம் தொடர்பில் இன்னும் ஏன் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்படவில்லை என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அமைச்சரின் ஒப்புதல் மற்றும் ஆலோசனையின் கீழ் மருந்துகளின் கொள்வனவில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் சிலர், கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும் ஒப்புதல் வழங்கிய முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை கைது செய்யாமை குறித்து தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சரின் அனுமதியின்றி 3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிக பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாது.

உரிய கேள்விப்பத்திர நடைமுறையை பின்பற்றாமல் அவசர கொள்முதலாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இந்தச் சம்பவத்திற்கு சுகாதார அமைச்சு முழுப் பொறுப்பேற்க வேண்டும். ரம்புக்வெல உட்பட இந்த நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் அனைவரும் கூட்டுப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்நிலையில் குற்றப் புலனாய்வுத்துறையினர், அமைச்சர் ரம்புக்வெலவின் வாக்குமூலத்தைக் கூட பதிவு செய்யவில்லை என்பது ஆச்சரியமாக உள்ளது.

அத்துடன், ஜனாதிபதியும் அமைச்சரவை உறுப்பினர்களும் முன்னாள் அமைச்சரை பாதுகாக்க முயற்சிக்கின்றனர்-என்றார்.

(அ)

# அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க வாழ்க்கை செலவு குழுவொன்றை அமைக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் ரிஷாத் வேண்டுகோள்



*கொழும்பு, டிசெ. 21*

வாழ்க்கை செலவு அதிகரித்து வருவதால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகவும், பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மூடப்பட்டுள்ள மஹர சிறைச்சாலை பள்ளிவாசலை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பார்வையிடச் சென்றிருந்தபோது, ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்து வருகின்றன. சந்தையில் அரிசி, மரக்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால், நுகர்வோர் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். கூலித் தொழில் செய்து பிழைப்பு நடத்தும் மக்களால் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்க அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றேன்.

நல்லாட்சிக் காலத்தில் நான் வர்த்தக அமைச்சராக இருந்த போது, அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாராவாரம் எம்மைச் சந்தித்து, அத்தியாவசிய பொருட்களின் விலைகளின் ஏற்ற இறக்கம் தொடர்பில் கலந்தாலோசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால், தற்போது அப்படியொரு நடைமுறை இருப்பதாகத் தெரியவில்லை.

இப்பொழுது அவர் ஜனாதிபதி என்பதால் வேலைப்பளு அதிகரித்துவிட்டதோ என்னவோ. எவ்வாறாயினும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள். இது தொடர்பில் வர்த்தக அமைச்சரோடு பேசி, வாழ்க்கைச் செலவுக் குழு ஒன்றை நியமித்து, அரிசி, மரக்கறிகள் போன்ற அத்தியாவசிய பொருட்களையாவது மக்களுக்கு சாதாரண விலைகளில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்- என்றார்.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

**டிசெம்பர் - 21 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - மார்கழி 05**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : தசமி**




**மேடம்**
குடும்பத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக் கூடும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**மிதுனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர் ஆவர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவை பெறுவீர்கள். சிந்தனை திறன் பெருகும் நாள்.

**கடகம்**
கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கன்னி**
பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**துலாம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். மனதிற்கு இதமான செய்திகள் வரும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**விருட்சிகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். உத்தியோகத்தில் உங்கள் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
திட்டமிட்ட வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பர். வெற்றி பெறும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

# வெள்ளம் பாதித்த மாவட்டங்களுக்கு ரூ. 2,000 கோடியை உடன் விடுவியுங்கள்

## இந்திய பிரதமரிடம் முதல்வர் கோரிக்கை

புதுடில்லி, டிசெ. 21

நான்கு மாவட்டங்களில் தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கு 2000 கோடி (இந்திய) ரூபாயை விடுவிக்க வேண்டும். என டில்லி சென்றுள்ள முதல்வர் ஸ்டாலின் பிரதமர் மோடியை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் மிச்சாங் புயல் பாதிப்பு மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தேவையான நிதி ஒதுக்குமாறு முதல்வர் ஸ்டாலின் ஏற்கனவே பிரதமரிடம் வலியுறுத்தி இருந்தார். இது தொடர்பாக டில்லி சென்ற முதல்வர் ஸ்டாலின் நேற்று முன்தினம் இரவு பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது தமிழகத்தில் புயல் கனமழை, வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளுக்கு தேவையான நிவாரண உதவிகளை வழங்கிடுமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி நான்கு மாவட்டங்களில் தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கு 2 ஆயிரம் கோடி ரூபாயை விடுவிக்க வேண்டும். வாழ்வாதார உதவிக்காகவும், தற்காலிக சீரமைப்பு பணிகளுக்காகவும் வழங்கிட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். 47 ஆண்டுகளில் இல்லாத வகையில் சென்னையில் ஏற்பட்ட மழை பாதிப்புகள் மற்றும் தென் மாவட்டங்களில் 100 ஆண்டுகளில் இல்லாத பாதிப்புகளை கருத்தில் கொண்டு தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும்.

மேலும், தற்காலிக நிவாரணத்தொகையாக ரூ.7 ஆயிரத்து 33 கோடியும், நிரந்தர நிவாரண தொகையாக ரூ. 12 ஆயிரத்து 659 கோடியும் நிதி வழங்க வேணடும் எனவும் கோரிக்கை விடுத்தார். (ஐ)

# திறந்த வீடுகளில் நுழையும் கட்சி அல்ல காங்கிரஸ்!

## அ. தி. மு. க. அழைப்புக்கு இப்படி பதில்

சென்னை, டிசெ. 21

கூட்டணி தொடர்பாக காங்கிரஸூக்கு கதவு திறந்திருப்பதாக அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அழைப்பு விடுத்துள்ளார். திறந்திருக்கும் வீடுகளில் எல்லாம் நுழையும் கட்சி காங்கிரஸ் அல்ல - இவ்வாறு தமிழக காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோது தெரிவித்தவை வருமாறு,

இந்திய பாராளுமன்றத்தில் 92 உறுப்பினர்களை பிரதமர் மோடி இடைநீக்கம் செய்துள்ளார். பாராளுமன்ற வரலாற்றில் இது போன்ற செயல் நடந்தது கிடையாது. பாராளுமன்றத்தில் பேசவே கூடாது என்று சொல்வதற்கு பிரதமர் மோடி யார், அவர் செய்தியாளர்களை சந்திப்பது இல்லை. கேள்வி கேட்டாலும் பதில் சொல்வதில்லை.

மஹூவா மொய்த்ரா அம்பானி, அதானி குறித்து பேசியதால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கார்கே நாட்டு நலனுக்காக நிதி திரட்ட வேண்டும் என்று கூறி உள்ளார். தமிழகத்தில் இருக்கும் நிர்வாகிகள், மக்கள் அனைவரும் நிதி வழங்க வேண்டும். பாராளுமன்றம், பேரவை உறுப்பினர்கள் ஒரு மாத ஊதியத்தை நிதியாக வழங்க வேண்டும்.

தற்போது பெய்த மழையால் தென் மாவட்டங்கள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. நீர்வழி பாதைகளை ஒழுங்குப்படுத்த வேண்டும். மத்திய குழு தமிழக அரசை பாராட்டி உள்ளது. ஆனால், தமிழக அரசை குறை கூறுகிறார்கள்.

காசி தமிழ் சங்கமத்தில் பா. ஜ. கவினரைதான் அழைத்துச் செல்கின்றனர். பேரிடர் தொடர்பாக ஆளுநர் ஆலோசனை நடத்தி அங்கும் அரசியல் பேசுகிறார். கூட்டணி தொடர்பாக காங்கிரஸூக்கு கதவு திறந்திருப்பதாக அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அழைப்பு விடுத்துள்ளார். திறந்திருக்கும் வீடுகளில் எல்லாம் நுழையும் கட்சி காங்கிரஸ் அல்ல - என்றார். (ஐ)

# ஐ. எஸ். ஐ. எஸ். ஆதரவாளர்கள் கண்காணிக்கப்படுகின்றனர்!

கோவை, டிசெ. 21

கோவை மாநகர காவல்துறையின் 'ஒக்ரோபஸ்' மென்பொருளில் ஐ.எஸ் ஆதரவாளர்கள் 200 பேர் உட்பட ஆயிரம் பேரின் விவரங்கள் பதிவேற்றம் செய்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என கோவை பொலிஸ் தெரிவித்துள்ளது.

கோவை மாநகர காவல்துறையில் நுண்ணறிவுப் பிரிவு (ஐ.எஸ்), சிறப்பு நுண்ணறிவுப் பிரிவு (எஸ்.ஐ.சி) ஆகிய உளவு பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகளின் சார்பில், மாநகரில் உள்ள காவல் நிலையங்கள் வாரியாக காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஆர்ப்பாட்டம், போராட்டம் மற்றும் சட்டம் ஒழுங்கு பாதிப்பு சம்பவங்கள் தொடர்பாக களத்துக்குச் சென்று தகவல்களை சேகரித்து தங்களது உயரதிகாரிகள் மூலம் மாநகர காவல் ஆணையரின் கவனத்துக்கு கொண்டு சென்று வருகின்றனர்.

இந்நிலையில், கடந்தாண்டு ஒக்ரோபர் மாதம் கோவையில் கார் வெடிப்புச் சம்பவம் நடந்தது. இதைத் தொடர்ந்து கோவையில் உளவுப் பிரிவுகளின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் ஐ.எஸ், எஸ்.ஐ.சி ஆகிய உளவுப் பிரிவுகளின் மூலம் களத்தில் சேகரிக்கப்படும் தகவல்களை ஒருங்கிணைத்து உடனுக்குடன் காவல் உயரதிகாரிகளுக்கு பரிமாற்றம் செய்யும் வகையிலும், சந்தேகத்துக்குரிய நபர்களை கண்காணிக்கவும், வி. ஐ. பி-க்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் தனியார் உதவியுடன் மாநகர பொலிஸாரின் சார்பில் 'ஒக்ரோபஸ்' என்ற பிரத்யேக மென்பொருள் உருவாக்கப்பட்டு, கடந்த மே மாதம் முதல் காவல் துறையினரால் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இந்த மென்பொருள் மூலம் ஆயிரம் பேரின் சுய விவரங்கள் சேகரிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மக்கள் வெள்ளத்தில் தவிப்பு முதல்வர் கூட்டணி கூட்டத்தில்!

## பா. ஜ. கவின் அண்ணாமலை

சென்னை, டிசெ. 21

மழை வெள்ளத்தில் மக்கள் தவிக்கிறார்கள். ஆனால், முதல்வர் ஸ்டாலின் 'இந்தியா' கூட்டணி கூட்டத்துக்காக டில்லி சென்றுள்ளார், என பா. ஜ. க. மாநில தலைவர் குற்றம் சாட்டினார்.

அண்ணாமலை நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது தெரிவித்தவை வருமாறு,

அரிசி, பருப்பு, எண்ணெய், சோப் போன்ற 16 வகையான அத்தியாவசிய பொருட்கள் கொண்ட தொகுப்பு 1.000 பேருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் இதுபோன்ற நிவாரண உதவிகள் அனுப்பி வைக்கப்படும். அடுத்த 3, 4 நாட்கள் தொடர்ந்து நிவாரணம் வழங்குவதில் கவனம் செலுத்துவோம். மழை வெள்ளத்தில் மக்கள் தவிக்கிறார்கள். ஆனால், தமிழக முதல்வர் ஸ்டாலின் 'இந்தியா' கூட்டணி கூட்டத்துக்காக டில்லி செல்வது ஏன்? ஒரு வாரம் இந்தக் கூட்டத்தை தள்ளிவைக்க முடியாதா? டில்லியில் 'இந்தியா' கூட்டணி சந்திப்புதான் முக்கியமா? - என்று அவர் கேள்வி எழுப்பினார். (ஐ)

# இமயமலைப் பிரகடனத்துக்கு சிவில் அமைப்புக்கள் எதிர்ப்பு!

## கபட நோக்கம் கொண்டது என சாடல்

கொழும்பு, டிசெ. 21

**திம்புக் கோட்பாடுகளைப் புறமொதுக்கும் யுக்தி அரசியலை முன்னெடுக்க விழையும், இமயமலைப் பிரகடனத்தின் கபட நோக்கங்களையும், திரிபுகளையும் முற்றாக நிராகரிப்பதாக வடக்கு கிழக்கைச் சேர்ந்த 69 சிவில் அமைப்புக்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் கையொப்பமிட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகத் தமிழர் பேரவை-சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியம் ஆகிய அமைப்புகள் இணைந்து வெளியிட்ட 'இமயமலைப் பிரகடனம்' வெளிப்படுத்தும் ஒன்று, இரண்டு, மூன்று நான்கு எனும் கூற்றுக்கள், மேற்குறிப்பிட்டவற்றை முற்றிலும் புறமொதுக்கி, இப் பிரச்னையைப் புரிந்துணர்வின்மைப் பிரச்சனையாகவும் தனிமனித-குழு அடிப்படையிலான மனித உரிமைப் பிரச்னையாகவும் கோட்பாட்டுச் சிதைப்பினை மேற்கொள்கின்றன.

இப்பிரச்னையை அற நீக்கமும், அரசியல் நீக்கமும் செய்ய விளைகின்றன. சிங்கள பௌத்த மேலாதிக்கக் கருத்தியலின் சகிப்பு எல்லைகளுக்குள் குறுக்க முயல்கின்றன.

இப்பிரகடனத்தின் ஐந்தாவது கூற்று, சிங்கள-பௌத்த கருத்தியலின் நிறைவேற்று எந்திரமாகிய அரசையும் அதன் வன்முறைக் கருவிகளான முப்படைகளையும் பொறுப்புக்கூறலில் இருந்து விடுவித்து, அரச கட்டமைப்புக்கு வெளியில் உள்ள சில பௌத்த துறவிகள், அமைப்புகள் என்பவற்றை மட்டும் அதனுடன் பிணைக்கிறது.

இது மிகவும் பாரதூரமான ஒரு அரசியல் சதியாகும்.

கூட்டாக கையெழுத்திடப்பட்ட இமயமலைப் பிரகடனத்திற்குப் பின்னதாக வெளியிடப்பட்ட உலகத் தமிழர் பேரவை சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியத்தினரின் கூட்டறிக்கை, உலகத் தமிழர் பேரவையின் குரலாக மட்டுமே வெளிப்படுகிறது.

சிங்கள பௌத்த மேலாண்மைக் கருத்தியலாலும் அதன் அரசியல் திட்டங்களாலும் இதுவரை விளைந்த பேரழிவுகள் குறித்த ஏற்றுக் கொள்ளுகையோ, சிறுவருத்தமோ கூட்டு அறிக்கையில் சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியத்தின் குரலாக வெளிப்படுத்தப்படவில்லை.

தாயகத்தில் வாழும் மக்களின் சார்பில் பேசுவதற்கும் ஒப்பந்தங்களையும் பிரகடனங்களையும் மேற்கொள்வதற்கும் தாயகத்தில் அவர்களால் அமைக்கப்படும் பரந்த 'கூட்டு முன்னணி' ஒன்றிற்கே தார்மீக உரிமை உள்ளது என்பதை மிகவும் அழுத்தம் திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறோம்-என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# யாழ்.மாவட்டத்தில் இன்று முழு நேர டெங்கு ஒழிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல பாடசாலை வளாகங்கள், வைத்தியசாலை வளாகங்கள், அரச நிறுவனங்கள் அமைந்துள்ள காணிகள், பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்கழக விடுதிகள், அனைத்திலும் இன்று முழு நேர டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலாளர் சிவபாலசுந்தரன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் மிக உச்சநிலையை அடைந்துள்ளது. நேற்று முன்தினத்தில் மட்டும் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட 111 டெங்கு நோயாளிகள் யாழ். போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டிருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் யாழ் மாவட்டத்தில் இம்மாதம் 18ஆம் திகதி வரை 886 டெங்கு நோயாளர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பூச்சியியல் ஆய்வுக்குழுவினர் யாழ்.மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் மிக அதிகமான டெங்கு பரவல் இருப்பதாகவும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் பெருகிக் காணப்படுவதாகவும் அடையாளம் கண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் இந்நிலைமை ஏனைய பிரதேசங்களுக்கும் வியாபித்து யாழ்.மாவட்டம் முழுவதும் டெங்கு தாக்கம் ஏறத்தாழ அபாயகரமான நிலைமையை எட்டியுள்ளது.

எனவே மேற்படி விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு அனைத்து அரசாங்க நிறுவனங்களும் பாடசாலைகள் மற்றும் பல்கலைகழக நிர்வாகங்களும் பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்-என்றுள்ளது.

(அ)

# 300 டெங்கு நோயாளர்கள் நாளாந்தம் பதிவாகின்றனர்!

கொழும்பு, டிசெ. 21

நாட்டில் நாளாந்தம் சுமார் 300 டெங்கு நோயாளர்கள் பதிவாகுவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், அதன் எண்ணிக்கை 38,164 ஆக உயர்வடைந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருட ஆரம்பம் முதல் இதுவரை 83,065 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள மாவட்டங்களில் 65 டெங்கு அபாய வலயங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் 49 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒருவருக்கு 48 மணித்தியாலங்களுக்கு காய்ச்சல் இருந்தால் அது டெங்குவாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும், சிகிச்சைக்காக தகுதியான வைத்தியரிடம் பரிந்துரைக்கப்பட வேண்டுமெனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

(அ)

# இலங்கைச் சிறுவர்கள் தொடர்புடைய 98,000 வீடியோ ஆபாச இணையங்களில்!

கொழும்பு, டிசெ. 21

இலங்கையில் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட ஆபாச மற்றும் தவறான சம்பவங்கள் தொடர்பான 98,000 புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் கூகுள் அப்ளிகேஷன் மூலம் இணையத்தில் பகிரப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில், சிறுவர்கள் சம்பந்தப்பட்ட ஆபாசமான மற்றும் தவறான சம்பவங்கள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் தொடர்பான 146,000 சம்பவங்கள் பகிரப்பட்டுள்ளன.

பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் தடுப்பு பணியகத்திற்குள் நிறுவப்பட்ட தரவு அமைப்பின் மூலம் இந்த தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த டேட்டா சிஸ்டம் 2021 ஆம் ஆண்டு அமெரிக்காவின் தலையீட்டில் கூகுளால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

கூகுளில் காணொளிகள் மற்றும் புகைப்படங்கள் பதிவேற்றப்படும் சேவையகத்தின் ஐ.பி இலக்கம் கூட இந்த தரவு அமைப்பு மூலம் இலங்கைக்கு தானாகவே வழங்கப்படும். இந்தத் தரவுகள் தானாகவே பெறப்படுவதால், சில வழக்குகள் இந்த நாட்டுடன் தொடர்புடையவை அல்ல என்றும், அண்டை நாடான இந்தியா உட்பட தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளுடன் தொடர்புடையவை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தரவு முறைமையில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் அண்மையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு ணையத்தில் சிறுமிகளின் நிர்வாணப் படங்களை வெளியிட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

(அ)

# 38 பவுண் தங்க கோப்பை மாயம் கதிர்காமம் ஆலய நிர்வாகி கைது!

கொழும்பு, டிசெ. 21

கதிர்காமம் ஆலயத்திற்கு வழங்கப்பட்ட 38 பவுண் தங்கக் கிண்ணம் காணாமல் போன சம்பவம் தொடர்பில் கதிர்காமம் ஆலயத்தின் பொறுப்பாளராக இருந்த "சுட்டி கபுவா" என அழைக்கப்படும் சமன் பிரியந்த நேற்று முன் தினம் பொலிஸில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் இருந்து இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக வாக்குமூலங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காணாமல் போன தங்கக் கிண்ணம் தொடர்பில் பிரதான சந்தேக நபரான கதிர்காமம் ஆலயத்தின் பிரதான பூசகர் சோமிபால டி. ரத்நாயக்க தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் இல்லை என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

சந்தேக நபர்களை கைது செய்வதற்காக கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் கடந்த 11 ஆம் திகதி கதிர்காமம் சென்றிருந்தபோதிலும், அவர்கள் தங்கள் வாசஸ்தலங்களில் இருக்காததால் வெறுங்கையுடன் கொழும்பு திரும்ப நேரிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் மருத்துவ சிகிச்சைக்காக கொழும்பு சென்றுள்ளதாகவும், கதிர்காமத்தில் இரண்டு சந்தேகநபர்களும் வசிக்கும் வீடுகளின் உரிமையாளர்கள் அவர்கள் வந்த பின்னர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு அறிவிக்கவுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவில் மரணமடைந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரான அங்கொட லொக்கா என அழைக்கப்படும் மத்துமகே லசந்த சந்தன பெரேராவின் மனைவி அபேசிங்க நிசன்சலா, அங்கொட லொக்காவின் வயதுக்கு ஏற்றவாறு 38 பவுண் எடையுள்ள தங்க கிண்ணத்தில் தனது மகனின் பெயரை பொறித்து ஜூலை 3, 2019 அன்று கதிர்காமத்திற்கு வழங்கியுள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகளின் மூலம், குறித்த தங்கக் கிண்ணம் காணிக்கை செலுத்தப்பட்டபோது, பொறுப்பேற்றிருந்தவர், கைது செய்ய தேடப்படும் சந்தேக நபரான பிரதான பூசகர் சோமிபால டி.ரத்நாயக்க என தெரியவந்துள்ளது.

வழங்கப்பட்ட தங்க கிண்ணம் சுமார் இரண்டு வாரங்களின் பின்னர் தலைமை பூசகரின் அறைக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கதிர்காமம் தேவாலயத்தில் அங்கொட லொக்காவின் மனைவி வழங்கிய தங்கக் கிண்ணம் காணாமல்போனதாக கதிர்காமம் பஸ்நாயக்க நிலமேயுக்கு வந்த அநாமதேய தொலைபேசி அழைப்பை அடுத்து, அவர் அப்போதைய பொலிஸ் மா அதிபர் மற்றும் மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்தார்.

தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், காணாமல்போன தங்க கிண்ணம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவிற்கு பணிப்புரை வழங்கினார்.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளையில், பொலிஸ் விசாரணைகளை தவறாக வழிநடத்தும் முயற்சியில் முந்தைய தங்கக் கிண்ணத்தை செய்த பொற்கொல்லருக்கு ரூ.41 லட்சம் வழங்கப்பட்டு அதேபோன்று தோற்றமளிக்கும் தங்கக் கிண்ணம் ஒன்று தயாரிக்கப்பட்டு, ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் ஆலயத்துக்கு பக்தர் ஒருவர் வழங்கிய 38 பவுண் தங்கக் கிண்ணம் காணாமல் போனமை தொடர்பில், கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் திஸ்ஸமஹாராம நீதிமன்றில் தகவல்களைப் பதிவு செய்து அதன் பின்னர் சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் திஸ்ஸமஹாராம நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், கடுமையான நிபந்தனைகளின் கீழ் விடுவிக்கப்பட்டார்.

(அ)

# வவுனியா மாவட்டத்தில் 64 குளங்கள் உடைப்பு!

## அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை

**வவுனியா, டிசெ. 21**

**வவுனியாவில் 479 குளங்கள் வான் பாய்வதுடன் இது வரை 64 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.**



தொடர்ச்சியாக பெய்து வருகின்ற மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களிற்கான நீர் வரத்து அதிகரித்தமையினால், பெரும்பாலான குளங்கள் வான் பாய்கின்றன.

குறிப்பாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 620 குளங்களில் 456 குளங்களும், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் 17 குளங்களும், மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் 06 குளங்களும் வான் பாய்வதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பாலிக்குளம், சின்னசிப்பிகுளம், தேகக்கம்குளம், பிரமநாலங்குளம், பரயநாலங்குளம் உட்பட 64 குளங்கள் உடைப்பெடுத்த நிலையில் கமநல அபிவிருத்தி திணைக்களம், இராணுவம், கிராம மக்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் இணைந்து குளங்களை மறுசீரமைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# யாழ். மாவட்டம் முழுவதும் பொலிஸ் விசேட நடவடிக்கை

## 70 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணத்தில் கடந்த 3 தினங்கள் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய பொலிஸார், வைத்திய அறிக்கை கிடைக்கப்பெற்றதும், அவர்களை நீதிமன்றங்களில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகமாக காணப்படுவதாக இனம் காணப்பட்ட பிரதேசங்களில் விசேட நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

அதன்போது, போதைப் பொருள் பாவனையாளர்கள், போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்தார்கள் எனும் குற்றச்சாட்டில், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலுமாக 70 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை தத்தம் பிரிவுக்கு உட்பட்ட சட்டவைத்திய அதிகாரி முன் முன்னிலைப்படுத்தி மருத்துவ பரிசோதனைக்கு பொலிஸார் உட்படுத்தியுள்ளனர்.

மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற பின்னர், தமது பொலிஸ் பிரிவுக்குரிய நீதிமன்றங்களில் அவர்களை முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை எதிர்வரும் நாட்களிலும் விசேட நடவடிக்கைகள் தொடரும் எனவும், போதைப்பொருள் வியாபாரிகள் சிலரை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

# மோட்டார் திணைக்களத்தில் பணம் வசூலித்த 11 பேர் கைது

கொழும்பு, டிசெ. 21

நாராஹேன்பிட்டி பிரதேசத்திலுள்ள மோட்டார் திணைக்களத்திற்கு வரும் மக்களிடம் பலாத்காரமாக பணம் வசூலித்ததாக குற்றம் சாட்டப்பட்ட 11 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த திணைக்களத்துக்கு தேவையின் நிமித்தம் வாகனங்களில் வரும் மக்களிடம் சில நபர்கள் பலாத்காரமாக பணம் வசூலிப்பதாக பொரள்ளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் போதைப்பொருள் கொள்வனவு செய்ய தேவையான பணத்திற்காக இவ்வாறு செயற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# சட்ட வைத்திய நிபுணரின் முத்திரையைப் பயன்படுத்தி போதை மாத்திரை பெற சிபார்சு செய்த இளைஞர் கைது!

கொழும்பு, டிசெ. 21

சட்ட வைத்திய நிபுணரின் உத்தியோகபூர்வ முத்திரை போன்று போலி முத்திரையைப் பயன்படுத்தி பல்வேறு நபர்களுக்கு போதை தரக்கூடிய மாத்திரைகளை கொள்வனவு செய்வதற்கு சிபார்சு செய்தார் எனக் கூறப்படும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து போதைப்பொருள், சட்ட வைத்திய அதிகாரியின் உத்தியோகபூர்வ முத்திரை உட்பட பலவற்றைக் கைப்பற்றியதாக நால்ல பொலிஸார் தெரிவித்தனர்.

மாலதெனிய பிரதேசத்தை சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

நால்ல பிரதேசத்தில் போதைப்பொருளுடன் காணப்பட்ட இளைஞர் ஒருவரைக் கைது செய்து, வைத்தியரால் வழங்கப்பட்ட ஐந்து மருந்து பரிந்துரை துண்டுகளையும் கைப்பற்றிய பொலிஸார், இவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனையடுத்து சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்டபோது வடமேற்கு மாகாணத்தில் உள்ள பிரபல வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணரின் உத்தியோகபூர்வ முத்திரை போன்ற போலி முத்திரைகளையும் கடிதத் தலைப்புகளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இதனையடுத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டபோது இந்த விடயம் தெரியவந்துள்ளது.

(அ)

# வாகன விபத்தில் சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 21

கம்பஹா - ஹக்கல்ல வீதியில் பஸ் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற சனோஜ் மதுசங்க என்ற தம்புடுவை பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவ சிப்பாயாவார்.

இவர் ஹல்கமவிலிருந்து ஹக்கல்ல பிரதேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது ஹக்கல நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவர் காயமடைந்த நிலையில் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# முல்லைத்தீவில் கேரளக் கஞ்சாவுடன் கணவன்,மனைவி உட்பட மூவர் கைது!

முல்லைத்தீவு, டிசெ. 21

முல்லைத்தீவில் கேரளக் கஞ்சாவுடன் 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அருகிலே கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை சம்பவ இடத்துக்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட விசேட பொலிஸ் அணி மற்றும் விசேட அதிரடிப் படையினர் குறித்த பகுதியில் உள்ள வீட்டில் 914 கிராம் கேரளக் கஞ்சாவை வைத்திருந்த 34 வயதுடைய நபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட முல்லைத்தீவு பொலிஸார் அவர் வேறு ஒரு இடத்தில் இருந்து கஞ்சாவை பெற்றுக் கொள்வதை அறிந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் அணியினரும் விசேட அதிரடி படையினரும் குறித்த நபரை கைது செய்வதற்காக சென்றபோது முள்ளியவளை புதரிகுடா பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 26 வயதுடைய கணவன் மனைவி இருவரையும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வைத்து 214 கிராம் கஞ்சாவுடன் கைது செய்துள்ளனர்.

(அ)

# உயர்தரப் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி!

கொழும்பு, டிசெ. 21

நாடளாவிய ரீதியில் 2023ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சையை எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, நாடு முழுவதும் உள்ள 2,298 பரீட்சை நிலையங்களில் ஜனவரி 4ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை உயர்தர பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில், பாடசாலை அதிபர்கள் மற்றும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் முகவரிகளுக்கு பரீட்சை தொடர்பான அட்டவணைகள், பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் மற்றும் பரீட்சை அட்டவணைகள் கிடைக்காவிட்டால், பாடசாலை அதிபர்கள், தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் www. doenets.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரவேசித்து குறித்த ஆவணங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மாவிலாறில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, டிசெ. 21

சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவிலாறு மதகுக்கு அருகில் பழைய ஆயுதங்கள் சிலவற்றை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் படி, கண்டுபிடிக்கப்பட்ட இராணுவ ஆயுதங்களில் ரி-56 துப்பாக்கிக்கான 22 ரவைகள், இரண்டு மகஸீன்கள், இரண்டு கைக்குண்டுகள் மற்றும் ரி-56 துப்பாக்கியின் ஒரு பகுதி ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட இராணுவ உபகரணங்கள் மேலதிக விசாரணைகளுக்காக சேருநுவர பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ)

# வெள்ள பாதிப்புக்குள்ளான மக்களுக்கு புதிய வீட்டுத் திட்டத்துடன் காணிகள்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

**கிளிநொச்சி, டிசெ. 21**

**வெள்ள பாதிப்புக்குள்ளான மக்களுக்கு புதிய வீட்டுத் திட்டத்துடன் காணி வழங்க ஆராயவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவாந்தா தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தபோது, மக்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று காலை கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப பாடசாலை மற்றும் கண்டாவளை மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களை சந்தித்தார்.

இதன்போது கண்டாவளை பிரதேச செயலாளர் ரி. பிருந்தாகரன், கிராம சேவையாளர் உள்ளிட்ட பலரும் அங்கு சென்றிருந்தனர்.

இதன்போது மக்களின் வெள்ள அனர்த்தம் ஏற்படும் பகுதியில் உள்ள மக்களின் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யும் வகையில், புதிய வீட்டுத் திட்டத்துடன் பாதுகாப்பான இடத்தில் காணி வழங்க மக்களின் விருப்பத்தை கேட்டறிந்தார்.

மேலும், குளத்தின் நீர்மட்டத்தை மேலும் குறைத்து அனர்த்த பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளமையால், தொடர்ந்தும் சில நாட்கள் வெள்ள நிலைமைகளை அவதானித்து வீடுகளுக்கு செல்லுமாறும் அவர் மக்களிடம் தெரிவித்தார்.

அனர்த்த பாதுகாப்புக்காக தஞ்சம் அடைந்த மக்களிற்கு சமைத்த உணவு பிரதேச செயலகத்தின் கண்காணிப்பில் வழங்கப்பட்டு வருவதுடன், சுகாதாரம் உள்ளிட்ட விடயங்களும் முறையாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்சார சபை ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு இல்லை

## அமைச்சர் காஞ்சன அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 21

மின்சார சபை ஊழியர்களுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான எந்தவொரு மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சார சபை பொது முகாமையாளர் மற்றும் தலைவருக்கு கடிதம் மூலம் அவர் இதனை அறிவித்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள கடிதத்தில்-

செயற்பாடுகள் மற்றும் நிர்வாகத்தின் செலவைக் குறைப்பதற்கான முன்னர் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் கொள்கை முடிவுகளுக்கு அமைய மின்சார சபை ஊழியர்களுக்கு முன்னர் செலுத்தப்பட்ட ஊக்கத்தொகைகள் மற்றும் கொடுப்பனவுகள் இதில் அடங்கும்.

2015 முதல் ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் வழங்கப்படும் 25 வீத சம்பள உயர்வும் வழங்கப்படமாட்டாது.

மேலும், மின்சார சபை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட 21 பல்வேறு கொடுப்பனவுகள் மற்றும் ஊக்கத்தொகைகள், 2023 இல் செலுத்தப்பட்ட தொகைகள், அவை எவ்வாறு செலுத்தப்பட்டன என்பது குறித்து எனக்கு அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு அதிகாரிக்கும் வாடகைக்கு மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் வாடகையாக செலுத்தப்பட்ட தொகைகள் ஆகியவற்றை என்னிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# 1,500 வைத்திய நிபுணர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றம்

## 40 வைத்தியசாலைகள் மூடப்பட்டன

கொழும்பு, டிசெ. 21

கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப் பகுதி வரை 1,500 வைத்திய நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். மேலும் 5,000 இற்கும் அதிகமானோர் வெளிநாடு செல்வதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

வைத்தியர்களின் வெளியேற்றம் காரணமாக தற்போது 40 இற்கும் மேற்பட்ட சிறிய மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# பயங்கரவாதிகளின் பிடியிலுள்ள இலங்கையர்களை மீட்பதற்கான பேச்சுக்கு மியன்மார் அரசு இணக்கம்!

கொழும்பு, டிசெ. 21

மியன்மாரில் பயங்கரவாதிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள 56 இலங்கையர்களை மீட்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அந்நாட்டு உள்துறை அமைச்சர் இணக்கம் வெளியிட்டுள்ளார்.

இந்த விடயத்தை மியன்மாருக்கான இலங்கை தூதுவர் உறுதி செய்துள்ளார்.

மியன்மாரின் தாய்லாந்து எல்லைக்கு அருகே பயங்கரவாத குழுவொன்றின் சைபர் அடிமைகளாக இலங்கை இளைஞர்கள் சிலர் பலவந்தமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகின.

குறித்த பிரதேசம் கூகுள் வரைபடத்தில் சைபர் குற்றப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மியன்மாரின் மியாவெட்டி நகரில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த பகுதி முழுமையாக பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் காணப்படுகிறது.

தாய்லாந்தில் கணினித் துறையில் தொழில்களை பெற்றுத் தருவதாக கூறி அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையின் இளைஞர், யுவதிகள் சிலர் இந்தப் பிரதேசத்திலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இளைஞரின் பணம் மோசடி!

## 3 தனியார் வங்கிகளிடமிருந்து அறிக்கை கோருவதற்கு அனுமதி

கொழும்பு, டிசெ. 21

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர் ஒருவரின் சத்திர சிகிச்சைக்காக வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்த 38 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகளுக்காக 3 தனியார் வங்கிகளிடமிருந்து அறிக்கை கோருவதற்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் அனுமதியளித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளுக்காக சந்தேகநபர்களுக்குச் சொந்தமான, மூன்று தனியார் வங்கிகளிலுள்ள கணக்கு தொடர்பான விவரங்களை பெற்றுக்கொள்ள உத்தரவிடுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புற்றுநோய்க்காக சிகிச்சை பெற்றுவரும் சிலாபம் - மஹாவெவ பிரதேசத்தைச் சேர்ந்த ரனிந்து விஹாரக சத்சர என்ற இளைஞரே நீண்ட காலமாக இடம்பெற்று வந்த இந்த மோசடியினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இரண்டு சந்தேகநபர்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அதன்போது, அவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேநேரம் புற்று நோயாளர்களின் வங்கிகளில் நன்கொடையாளர்களால் வரவு வைக்கப்பட்ட உதவித் தொகையை மோசடியாக பெற்றமை தொடர்பாக கணினி குற்ற விசாரணைப் பிரிவுக்கு இதுவரை 11 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில், சுமார் இரண்டரை கோடி ரூபாய் இந்த சந்தேகநபர்களால் மோசடியாகப் பெறப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புற்று நோயாளர்களின் நோயைக் குணப்படுத்துமாறு இணையத்தளத்தில் விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த சந்தேகநபர்கள், புற்று நோயாளர்களின் வங்கிக் கணக்கு இலக்கங்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், தொலைபேசி இலக்கங்கள் போன்றவற்றை பெற்றுள்ளனர்.

சந்தேகநபர்கள் அந்த ஆவணங்களைப் பயன்படுத்தி அந்த நோயாளிகளின் பெயரில் தனியார் தொலைபேசி நிறுவனங்களிடமிருந்து சிம் அட்டைகளை பெற்றுள்ளனர்.

சிம் அட்டையின் தரவுகள் ஊடாக புற்றுநோயாளிகளின் கணக்குகளை அணுகி, அந்த கணக்குகளில் உள்ள பணத்தை மோசடியான முறையில் பெற்றுக் கொண்டுள்ளதாக கணினி குற்ற விசாரணை பிரிவு நீதிமன்றில் தெரிவித்துள்ளது. (அ)

# போலித் துப்பாக்கி, தோட்டாவுடன் வர்த்தக நிலையத்தில் பெண் கைது!

கொழும்பு, டிசெ. 21

போலி ரிவோல்வர் மற்றும் போரா ரக துப்பாக்கி தோட்டாக்கள் நான்குடன் வீரவில பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றின் பெண் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வர்த்தக நிலையத்தில் காணப்பட்ட பொருட்களை வைக்கும் தட்டு ஒன்றை பொலிஸார் சோதனையிட்ட போது அங்கு மறைத்து வைக்கப்பட்ட பொதியில் இவற்றை கைப்பற்றினர்.

குறித்த வர்த்தக நிலையத்தின் பெண் உரிமையாளரின் உறவினர் ஒருவர் கடந்த 17 ஆம் திகதி இதனை கையளித்துள்ளமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த நபர் தற்போது பிரதேசத்தை விட்டு தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# முட்டையின் விலை மேலும் குறையும்?

கொழும்பு, டிசெ. 21

சந்தையில் முட்டை விலை மேலும் குறைவடையக்கூடுமென அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளர் அனுர மாரசிங்க தெரிவித்துள்ளார்.

முட்டைக்கான கேள்வி குறைவடைந்துள்ளமையினால் தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள அதிகளவான முட்டைகள் சந்தைக்கு விநியோகிக்கப்படாமல் பண்ணைகளில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் உயர்வடைந்திருந்த முட்டையின் விலை தற்போது நாட்டின் பல பகுதிகளில் 50 முதல் 52 ரூபாய் வரையில் குறைவடைந்துள்ளது.

எனவே எதிர்வரும் காலங்களில் முட்டையின் விலை 30 முதல் 40 ரூபாய் வரையில் மேலும் குறையக்கூடிய சாத்தியம் நிலவுவதாக அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளர் அனுர மாரசிங்க கூறினார். (அ)

# சாதனை மாணவிகள் கௌரவிப்பு நிகழ்வு

அம்பாறை, டிசெ. 21

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி 44 ஆவது உயர்தர மாணவிகள் தினமும் 2022ஆம் ஆண்டு க.பொ.த உயர் தர பரீட்சையில் சிறந்த சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகளுக்கும் மற்றும் அண்மையில் வெளியான க.பொ.த சாதாரன தர பரீட்சையில் சிறந்த சித்திகளை பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் கல்லூரி சேர் ராஸிக் பரீத் மண்டபத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலய கல்வி பணிப்பாளர் எம். சஹூதுல் நஜீமும், கௌரவ அதிதியாக கல்முனை வலய கல்வி அலுவலகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) எம்.எச்.எம். ஜாபீரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கல்லூரியின் பிரதான நுழைவாயில் கட்சிப்படுத்தப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டு உயர் தரத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள், சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவிகளின் பெயர் பட்டியல் அடங்கிய விளம்பர பலகை பிரதம அதிதியினால் திரை நீக்கம் செய்யப்பட்டதுடன் உயர்தர மாணவர் தின மலர் வெளியீடு இடம் பெற்றது.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மற்றும் க.பொ.த (சா/த) சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவிகளுக்கு பதக்கங்கள், பாடசாலை பைகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

# கல்முனை வலய பாடசாலைகளுக்கு ஜோசப் ஸ்டாலின் திடீரென விஜயம்

அம்பாறை, டிசெ. 21

கல்முனை கல்வி வலய ஆசிரியர் சங்க செயலாளரின் கோரிக்கையை ஏற்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கல்முனை வலய பாடசாலைகளுக்கான தரிசிப்பை மேற்கொண்டு அதிபர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி, கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மற்றும் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயம் ஆகியவற்றுக்கு சமூகமளித்திருந்தார்.

இதன்போது அதிபர், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் அதிபர் ஆசிரியர்களால் ஜோசப் ஸ்டாலினின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அவற்றுக்கான தீர்வுகள் முன்வைக்கப்பட்டு உரிய தரப்பினருடன் பேசி தீர்வை பெற்றுக் கொடுக்கும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

(அ)



# மாற்று வலுவுள்ளோருக்கு உபகரணங்கள் வழங்கல்

அம்பாறை, டிசெ. 21

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வலது குறைந்தோருக்கான உபகரணங்களில் ஒரு தொகை பொத்துவில் பிரதேச செயலகத்தில் உரிய பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.இராமகுட்டி தலைமையிலான இந்த நிகழ்வில் அம்பாறை பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.எஸ்.முஸராப் கலந்து கொண்டு உபகரணங்களை பயனாளிகளிடம் வழங்கினார்.

இந்த நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலக கணக்காளர் அப்துல் றஹூமான், நிருவாக உத்தியோகத்தர் எம்.எம்.சுபையிர், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.ஜீ.அர்ஸாத், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.பதிஹ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரின் அம்பாறை மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர் வை.எல். நியாஸ், பொதுமக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (அ)



# மட்டக்களப்பு "தீரணியம்" பாடசாலை 2023 ஆம் ஆண்டுக்கான நிறைவு விழா

மட்டக்களப்பு, டிசெ. 21

மட்டக்களப்பு "தீரணியம்" பாடசாலையின் 2023ஆம் ஆண்டுக்கான நிறைவு விழா தீரணியம் திறந்த பாடசாலை பயிற்சி நிலையத்தின் அதிபர் அருட்சகோதரர் மைக்கல் தலைமையில் நேற்று முன் தினம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கிழக்கு மாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கலந்து கொண்டனர்.

தீரணியம் திறந்த பாடசாலை பயிற்சி நிலையத்தின் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒழுங்கமைப்பில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

2023 ஆம் ஆண்டிற்கான நிறைவினை சிறப்பிக்கும் வகையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் பங்கு பற்றிய மாணவர்களுக்கு பரிசுகள் அதிதிகளினால் வழங்கப்பட்டது.




"தீரணியம்" திறந்த பாடசாலையில் ஓட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பராமரித்து, சிறுவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்ற குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர், மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பொறுப்பு அதிகாரி, சென் ஜோன்ஸ் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் மீரா சாய்பு, தீரனியம் திறந்த பாடசாலை பயிற்சி நிலையத்தின் உளநல மருத்துவ சேவை ஆலோசகரும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை வைத்திய நிபுணரும் ஜூடி ஜெயகுமார், தீரணியம் திறந்த பாடசாலை பயிற்சி நிலையத்தின் அருட்சகோதரர் ஸ்டீபன் மெதியு, தீரணியம் திறந்த பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(அ)

# பாடசாலைகளில் கலை மன்றங்களை அமைக்கும் வேலைத்திட்டம் கிழக்கில்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் பாடசாலைகளில் கலை மன்றங்களை அமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் நேற்று முன் தினம் இது தொடர்பான விசேட நிகழ்வொன்று இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், அக்கரைப்பற்று கல்வி வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.சவுறுதீன் உள்ளிட்டோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் கலை இலக்கிய ஆற்றல்களையும், ஆளுமைகளையும் மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் இவ்வேலைத் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 17 பாடசாலைகளில் இவ்வாறு கலை மன்றங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் கருங்கொடி கலாமன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு, அதற்கென நிருவாகத் தெரிவும் இதன்போது இடம் பெற்றது.



இந்நிகழ்வின்போது கலைகள் தொடர்பான நூல்கள் சில மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரினால் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# ஹூதி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் தீவிர தாக்குதல்!

## தீவிரவாதிகளை அழிக்க அமெரிக்கா புதிய திட்டம்

நியூயோர்க், டிசெ. 21

**செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல் அதிகரித்துள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக அமெரிக்கா ஒன்பது நாடுகளுடன் கூட்டு அமைத்துள்ளது.**

**இந்த திட்டம் குறித்து அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்ரின் தகவல் வெளியிட்டுள்ளார்.**

பிரித்தானியா, பஹ்ரைன், கனடா, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, நோர்வே, சீஷெல்ஸ் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் அமெரிக்காவுடன் கைகோர்த்துள்ளன.

"யேமனில் இருந்து தொடங்கும் ஹூதி தாக்குதல்களின் தீவிரம் செங்கடல் வரை அதிகரித்துள்ளது.

இது அப்பாவி கடற்படையினருக்கு ஆபத்தானதுடன், சர்வதேச சட்டத்தை மீறுகிறது" என்று ஒஸ்டின் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

செங்கடல் முக்கியமான நீர்வழி தடம் என்பதுடன் சர்வதேச வர்த்தகத்தை எளிதாக்கும் ஒரு பெரிய வணிகப் பாதையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், யேமன் கிளர்ச்சிக் குழுவால் முன்வைக்கப்படும் சவால்களை சமாளிக்கவும் செங்கடல் பகுதியின் சுதந்திரத்தை நிலைநிறுத்த நாடுகள் ஒன்றுபட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.



தெற்கு செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் பாதுகாப்பு சவால்களை கூட்டாக சமாளிப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள நாடுகள் உறுதியளித்துள்ளதாகவும் ஆஸ்டின் வெளிப்படுத்தினார்.

தற்போது பஹ்ரைனை தலைமையிடமாகக் கொண்டுள்ள ஒருங்கிணைந்த பணிக்குழு 153 என்ற பணிக்குழுவை விரிவுபடுத்துவதற்கான வழிகளைத் தேடுவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையே ஒக்ரோபர் 7 முதல் மோதல் தீவிரமடைந்ததில் இருந்து ஹூதி குழு இஸ்ரேல் மீது ஏவுகணை மற்றும் பிற எறிகணை தாக்குதல்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மீண்டும் ஜனாதிபதியாக டிரம்ப் தகுதி இல்லாதவர்!

## கொலராடோ நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு



நியூயோர்க், டிசெ. 21

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக தகுதியற்றவர் என கொலராடோ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த முறை நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தல் போட்டியில் டொனால்ட் டிரம்ப் போட்டியிட்டார்.

ஏற்கனவே ஜனாதிபதி பதவியில் இருந்து 2ஆவது முறையாக போட்டியிட்ட அவர், ஜோ பைடனிடம் தோல்வியடைந்தார்.

இருந்த போதிலும் டொனால்ட் டிரம்ப் தனது தோல்வியை ஏற்க மறுத்து வந்தார். அவரது ஆதரவாளர்களும் டிரம்பின் தோல்வியை ஏற்க மறுத்தனர். மேலும், அமெரிக்க பாராளுமன்றத்தில் நுழைந்து போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் டிரம்பிற்கு பங்கு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. இதுதொடர்பாக அமெரிக்காவின் பல்வேறு மாகாணத்தில் உள்ள நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டது.

அந்த வகையில் கொலராடோவில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணை முடிவில், டொனால்ட் டிரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு தகுதியற்றவர் என நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பை வழங்கியுள்ளது.

மேலும், குடியரசு கட்சி சார்பில் யார் வேட்பாளர் என்பதற்கான தேர்தல் நடைபெறும் போது, வாக்குச்சீட்டில் அவரது பெயர் இடம் பெறக்கூடாது. ஒருவேளை பெயர் இடம் பெற்றாலும் அவருக்கு வாக்களித்திருந்தால் அது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது எனத் தெரிவித்துள்ளது.

இருந்தபோதிலும் ஜனாதிபதிக்கான முக்கியமான தேர்தலில் தடைவிதிக்கப்படவில்லை. இந்த தீர்ப்பை எதிர்த்துள்ள டொனால்ட் தரப்பினர், மேல்முறையீடு செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

மேல்முறையீடு செய்யும் வகையில் இந்த தீர்ப்பு அடுத்த ஆண்டு ஜனவரி 4ஆம் திகதி வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(அ)

# விமானியின் சாதுரியத்தினால் காப்பாற்றப்பட்ட 180 பயணிகள்!

திருச்சி, டிசெ. 21

மலேசிய தலைநகர் கோலாலம்பூரிலிருந்து திருச்சி வரை பயணித்த மலிண்டோ எயார் லைன்ஸ் விமானம் தரையிறங்குவதற்கு ஆயத்தமான நிலையில் விமானத்தின் ஒரு சில்லில் காற்று இல்லாமல் போனதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து உடனடியாக திருச்சி விமான நிலையத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கு விமானிகள் தகவல் அனுப்பியுள்ளனர்.

இந்தநிலையில், உடனடியாக விமானம் தரை இறங்க தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள விமான நிலைய ஊழியர்களுக்கு அறிவுறுத்தினர்.

அத்துடன், தீயணைப்பு வாகனங்கள் உற்பட அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் உடனடியாக முன்னெடுக்கப்பட்டன.

இதனை தொடர்ந்து விமானிகளும் சாதுர்யமாக செயல்பட்டு, வேக கட்டுப்பாட்டுடன் விமானத்தை தரை இறக்கினர்.

இதனால் பாதுகாப்பான முறையில் விமானத்தில் பயணித்த 180 பயணிகளும் காப்பாற்றப்பட்டனர்.

(அ)




# காஸா மீது தாக்குதலை தீவிரப்படுத்தும் இஸ்ரேல்

## அகதிகள் முகாம் மீது குண்டு வீசி தாக்குதல்

ஜெருசலேம், டிசெ. 21

இஸ்ரேல் - ஹமாஸ் போரில் வடக்கு காஸாவின் ஜபாலியாவில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நேற்று முன் தினம் நடத்திய தாக்குதலில் 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அதேபோல் ரஃபாவில் மூன்று குடியிருப்புகள் மீது குண்டு வீசி தகர்க்கப்பட்டது. இதில் 30 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒக்ரோபர் 7 ஆம் திகதி தொடங்கியதிலிருந்து இதுவரை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் பெண்கள், குழந்தைகள் உள்பட 19,453 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் குழுக்கள் மாறி மாறி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் அப்பாவி பொதுமக்கள் தங்களது உயிரை இழந்து வருகின்றனர்.

இந்நிலையில், மக்களின் உயிரைக் காக்க காஸாவில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி ஐ.நா பொதுச் சபையில் அண்மையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா உள்ளிட்ட 153 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.



அமெரிக்கா, இஸ்ரேல், ஆஸ்திரியா உள்ளிட்ட 10 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன.

"காஸா மீது இஸ்ரேல் கண்மூடித்தனமாக குண்டுவீசித் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ் படையினர் மீதான தாக்குதலில், பாலஸ்தீன மக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். இதே நிலை தொடர்ந்து நீடித்தால் இஸ்ரேல் மிக கடினமான நிலையை சந்திக்க நேரிடும். இஸ்ரேல் உலகளாவிய ஆதரவை இழந்து வருகிறது" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்தார்.

அதற்கும் இரங்காத இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு "நாங்கள் கடைசி வரை போராடுவோம். இதற்குமேல் பேச எதுவுமில்லை. போர் நிறுத்தத்துக்கு சர்வதேச அளவில் அழுத்தம் கொடுத்தாலும் காஸாவில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து சண்டையிடும் என்பதை வலியுடன் பதிவு செய்கிறேன். யாராலும் எங்களைத் தடுக்க முடியாது. வெற்றியை நோக்கி இறுதிவரை நாங்கள் செல்வோம். அதைவிட எங்களுக்கு பெரிது எதுவும் கிடையாது" என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், இஸ்ரேல் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் வடக்கு காஸாவின் ஜபாலியாவில் உள்ள அகதிகள் முகாமில் 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

(அ)

# சுயாதீன வேட்பாளராக களமிறங்குவார் ரணில்!

**கூறுகிறார் ரவி கருணாநாயக்க**

கொழும்பு, டிசெ. 21

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராக களமிறங்குவார் என முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய கட்சிகளும் இணைந்து இந்த நாட்டை அபிவிருத்திப் பயணத்தில் கொண்டு செல்கின்றன.

மேலும் நாடு இலகுவான பயணம் செல்லவில்லை. இருண்ட பயணம் ஒன்றையே முன்னெடுக்கின்றது.

எனினும் ஒருவித முன்னோக்கு பார்வையுடன் கூடிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

மக்களுக்கு முழுமையான நிவாரணங்களை வழங்க முடியாவிட்டாலும் அவர்களை படுகுழியில் இருந்து வெளியே கொண்டுவந்து பாதுகாப்பாக முன்னோக்கிக் கொண்டு செல்வதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

2024 ஆம் ஆண்டு மக்களுக்கும் நாட்டுக்கும் மங்களகரமான ஆண்டாக இருக்கும் என்று நம்புகிறோம்.

ஜனாதிபதி என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க சுயாதீனமான ஜனாதிபதியாக செயற்பட வேண்டும். அவர் அனைத்து கட்சிகளின் கூட்டாகதான் இதனைச் செய்கிறார்.

பலரும் போட்டியிட விரும்புகிறார்கள். ஆனால் ஒரு நாடு ஆபத்தில் இருக்கும் போது நாட்டுக்கு பாதுகாப்பை கொடுக்கும் தலைமைத்துவம் இருக்கும் நபர்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றார்கள்-என்றார். (அ)

# மேலதிக வகுப்புகளுக்கு 29ஆம் திகதி முதல் தடை

கொழும்பு, டிசெ. 21

2023ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி முதல் 31 திகதி வரையில் நாடளாவிய ரீதியிலுள்ள 2,298 பரீட்சை நிலையங்களில் உயர்தரப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

இதன்படி, பரீட்சை நிறைவடையும் வரையில் பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகளை நடத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# துப்பாக்கி வெடித்து சிறுமி காயம்!

கொழும்பு, டிசெ. 21

வரக்காபொல-அல்கம பகுதியில் நேற்று முன் தினம் இரவு கட்டுத் துவக்கு வெடித்ததில் சிறுமி ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் வரக்காபொல பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுமி ஒருவரே காயமடைந்தார்.

அவர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பில் வரக்காபொல பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# டெங்கு, இன்புளுவன்சா வைரஸ் பரவல் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 21

நாட்டில் தற்போது டெங்கு, இன்புளுவன்சா மற்றும் பல வைரஸ் நோய்கள் பரவி வருவதால் மக்களை அவதானமாக இருக்குமாறு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் சுவாச நிபுணர் சன்ன டி சில்வா தெரிவித்தார்.

இதனால், கொரோனா காலத்தில் பின்பற்றப்பட்ட சுகாதார பழக்கவழக்கங்களைக் மீண்டும் பின்பற்றுவதன் மூலம், வைரஸ் நோய் தொற்றுக்கள் பலவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என குறிப்பிட்டார்.

தற்போது பரவி வரும் வைரஸ்கள், கொவிட் வைரஸ் குழுக்களா என்பதை உறுதிப்படுத்தும் சோதனைகள் மேற்கொள்ளப்படாததால் அதனை சரியாக கூற முடியாது என அவர் மேலும் கூறினார்.

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால், மருத்துவரின் ஆலோசனையின் பேரில் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் எனவும், மருத்துவரின் ஆலோசனையின் பேரில் பரசிட்டமோல் தவிர மற்ற மருந்துகளை எடுத்துக் கொள்ளக் கூடாது எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

குறிப்பாக இந்நாட்களில் வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டு தினமும் 50 சிறுவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதோடு அனைத்து அறைகளும் சுவாச நோயாளிகள் மற்றும் காய்ச்சலினால் நிரம்பி வழிகின்றன.

இதனால் பண்டிகைக் காலத்தில் சிறுவர்களையும் குழந்தைகளையும் நெரிசலான இடங்களுக்கு அழைத்துச் செல்வதை முடிந்தவரை குறைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# சைவ மங்கையர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறந்து வைப்பு

கொழும்பு, டிசெ. 21

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளவத்தையில் அமைந்துள்ள சைவ மங்கையர் வித்தியாலயத்தில்,கடந்த 17ஆம் திகதி திறன் வகுப்பறை, பௌதீகவியல் ஆய்வுக் கூடத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த பாடசாலையில் க.பொ.த உயர் தரக் கல்வி கற்கும் மாணவர்களின் நவீன கற்றல் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக, இந்த திறன் வகுப்பறையானது திறந்து வைக்கப்பட்டது.

ரட்ணம் பவுண்டேசன் (லண்டன்) மற்றும் வ.ஹரிச்சந்திரன் (விசன்ஸ், அமெரிக்கா) ஆகியோரின் இணைந்த நிதிப் பங்களிப்பில் வழங்கப்பட்ட இந்த திறன் வகுப்பறையை, விசன்ஸ் குளோபல் எம்பவர் மென்ட் நிறுவனம் வைபவ ரீதியாக தொடக்கி வைத்தது.

சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி அருந்ததி ராஜவிஜயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ந.தெய்வேந்திரராஜா மற்றும் விசன்ஸ் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி அ.மயூரன் ஆகியோர்



சிறப்பு அதிதிகளாக கலந்து, திறன் வகுப்பறையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

சைவ மங்கையர் வித்தியாலய உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றலுடன் நடைபெற்ற இந்நிகழ்வில், அப்புத்தளை வின்ரோஸ் இன்டர்நஷனல் நிறுவனத்தின் பணிப்பாளர் செல்வி.ரேகா கொட்வின் பால் மற்றும் விசன்ஸ் நிறுவனத்தின் சார்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்திருந்த நான்கு பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நான்கு முன்மாதிரித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

திறன் வகுப்பறை மூலம் க.பொ.த உயர்தர மற்றும் சாதாரண தர மாணவர்கள் திறன் தொழில்நுட்பத்துடன் நவீன முறையில் கற்றல் செயல்பாடுகளில் வெவ்வேறு நேர சூசி அடிப்படையில் நாளாந்தம் பயன்பெறுவர் என்று தெரிவித்த பாடசாலை அதிபர், இந்த திறன் வகுப்பறையை வழங்கிய இரட்ணம் பவுண்டேஷன் (லண்டன்) மற்றும் வ.ஹரிச்சந்திரன் (விசன்ஸ், அமெரிக்கா) ஆகியோருக்கும், ஆரம்பித்து வைத்த விசன்ஸ் நிறுவனத்திற்கும் தனது நன்றியை தெரிவித்தார். (அ)

# சஜித் ஜனாதிபதி-அநுர பிரதமர் புதிய கூட்டணிக்கு யோசனை!

கொழும்பு, டிசெ. 21

“வரிச்சுமை அதிகரிப்பால் இந்த அரசை விரட்ட வேண்டும் என்ற முடிவுக்கு நாட்டு மக்கள் வந்துவிட்டனர். எனவே, ‘சஜித் ஜனாதிபதி - அநுர பிரதமர்’ என்ற கோரிக்கையை ஏற்று எதிரணி கூட்டணியில் ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் இணையவேண்டும்.”

-இவ்வாறு சுதந்திர மக்கள் சபை அழைப்பு விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா கூறியவை வருமாறு:-

நாட்டு மக்களுக்கு வற் சுமை வழங்கிய ‘வற் தந்தையாக’ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாறியுள்ளார். இவ்வாறு ‘வற்’ வதை கொடுக்கும் அரசை ‘பிளட்’ (தரைமட்டமாக்க) ஆக்க நாட்டு மக்கள் தயாராகிவிட்டனர்.

இதற்கு எதிரணிகள் ஒன்றுபட வேண்டும். அதற்கான முயற்சியில் நாம் இறங்கியுள்ளோம். பேச்சு வெற்றியளித்துள்ளது. மேலும் சில தரப்புகளுடன் பேச்சுகள் நடத்தப்படும்.

எதிர்காலத்தில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைப்பதே எமது நோக்கம். அதற்கான பணியை நாம் முன்னெடுக்கின்றோம். இந்த பலமான பொது எதிரணி கூட்டணியில் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பனவும் இணைய வேண்டும். சஜித் ஜனாதிபதி, அநுர பிரதமர் என்ற யோசனையையும் நாம் முன்வைத்துள்ளோம்-என்றார். (அ)

# வடக்கில் 29 பாடசாலைகளுக்கு சீரற்ற கலநிலையால் விடுமுறை!

யாழ்ப்பாணம், டிசெ. 21

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் 12 மாவட்டங்களில் 3 ஆயிரத்து 200 குடும்பங்களைச் சேர்ந்த 10ஆயிரத்து 958 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 29 பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் மாத்திரம் ஆயிரத்து 708 குடும்பங்களைச் சேர்ந்த 5,625 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்டுள்ளவர்களை தங்கவைக்கும் நோக்கில் இடைத்தங்கல் முகாம்களாக பயன்படுத்துவதற்காக வட மாகாணத்தின் 29 பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ். - மன்னார்...

இதேசமயம், கிராஞ்சி, வேரவில் பிரதேசங்களுக்கான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து சிரமமானதால் மருத்துவமனை சேவை மற்றும் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (ஐ)

## தீர்வு இல்லா...

தெரிவித்துள்ளது.

சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டால் ஜனவரி முதலாம் திகதி முதல் கடுமையான தொழில்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழுவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து தற்போது வரை, நாடு விசேட வைத்தியர்கள் உட்பட 1700இற்கும் அதிகமான வைத்தியர்களை இழந்துள்ளதுடன், 5,000 இற்கும் அதிகமான வைத்தியர்கள் விரைவில் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் உள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியர் பற்றாக்குறை காரணமாக 20 சிறிய வைத்தியசாலைகள் முற்றாக மூடப்பட்டுள்ளதுடன் 400 இற்கும் மேற்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் விசேட வைத்திய பிரிவுகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புக்கு இன்று வியாழக்கிழமை வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு பதிலளித்து அனுப்பிய கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்ற மிக முக்கியமான விடயம் தொடர்பில் ஜனாதிபதியால் ஏற்கனவே, வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அமுல்படுத்தாமல் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடுவதன் மூலம் எந்தவொரு பயனுள்ள நோக்கமும் நிறைவேறாது என்பதே எனது கருத்தாகும்.

ஆகவே, நாளை (இன்று) நடைபெறவுள்ள ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளப்போவதில்லை என்பதையிட்டு வருந்துகிறேன். எனது முடிவை ஜனாதிபதிக்கு தெரிவிக்கவும்”- என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## மாணவரை...

பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றக் கட்டளை பெறப்பட்டுள்ளது. அத்துடன், போதைப் பொருள் பாவனையில் ஈடுபடும் மாணவர்களின் விவரங்கள், சந்தேக நபர்களை விசாரணை செய்து பெறப்படவுள்ளன. (அ)

## உலக வங்கி...

கீழ் கடந்த ஜூன் மாதம் முதல் தவணையாக 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி வெளியிட்டிருந்தது. (அ)

## 2024 இலங்கை...

செல்கிறது. இது அடுத்த சில ஆண்டுகளுக்கு தொடர வேண்டும்.

எவ்வாறாயினும், இஸ்ரேல் காசா போர் காரணமாக சில பாதிப்புகள் ஏற்படலாம். இதன் விளைவாக, எண்ணெய் விலைகள் அதிகரிக்க கூடும். எண்ணெய் விலைகளே அடுத்த ஆண்டு பாரிய சவாலாக இருக்கும்.

உலகளாவிய வட்டி விகிதங்கள் அதிகரிப்பதற்கான சில அறிகுறிகள் உச்சத்தில் இருப்பதையும் நாங்கள் காண்கிறோம். என்றாலும் அடுத்த ஆண்டு பொருளாதாரத்தில் தளர்வு இருக்கும். அன்னியச் செலாவணி வருவாய் பொருளாதாரத்துக்கு பலமானதாக இருக்கும்.” எனவும் வெளிநாட்டு மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, 2024 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சி 1.8 வீதம் என கணிக்கப்பட்டுள்ளதாக கூறியிருந்தார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## வடக்கு, கிழக்கு...

வர வேண்டும் என்று எவரேனும் எண்ணியிருந்தால் நேற்றைய அமைச்சரவை அனுமதியுடன் அதனை மேற்கொள்ள முடியாது அல்லவா. அரிசி துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டமையை தொடர்ந்து அனுமதி பெறப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஏனெனில் அந்த செயன்முறையை மேற்கொள்ள சுமார் 15 நாட்கள் எடுக்கும். வடக்கு, கிழக்கில் உள்ள விவசாயிகள் பெரும்போக அறுவடைக்கு காத்திருக்கும் தருணத்தில் அரிசியை இறக்குமதி செய்வது முறையான விடயமா? என வினவ விரும்புகின்றேன். நாட்டுக்கு ஒரு வருடத்துக்குத் தேவையான அரிசியில் 80 வீதமான அரிசி பெரும்போகத்தில் அறுவடை செய்யப்படும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. இத்தகைய பின்னணியில் அரிசியை இறக்குமதி செய்வது முறையானதா? அரிசி இறக்குமதி செய்யப்படும் பட்சத்தில் விவசாயிகளின் அரிசியின் விலை குறைவடையும் நிலை ஏற்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## அடுத்த...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் அவசியம். அடுத்த தேர்தலில் அவர் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டும். நாம் ஜனாதிபதி பக்கம் நிற்போம்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் மோதல் இல்லை. தற்போதைய ஜனாதிபதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களும் வாக்களித்தனர்.

நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முடியும் என்ற நம்பிக்கையிலேயே 134 பாராளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவு வழங்கினர்.

நான் முக்கிய பதவியை வகிப்பலாம். நெருக்கடி நிலைமை என்ன என்பது புரியும். எனவே, ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வரவேண்டும்-என்றார். (அ)

# டலஸை எம்மிடமிருந்து பிரிக்க ஜனாதிபதி சதி!

## குற்றஞ்சாட்டுகிறார் ஜி.எல். பீரிஸ்

கொழும்பு, டிசெ. 21

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை எமது கூட்டணியில் இருந்து பிரிப்பதற்கு ஜனாதிபதி சதித் திட்டம் தீட்டி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜீ. எல். பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் வலியுறுத்தியதாவது-

சுதந்திர மக்கள் காங்கிரஸின் 13 உறுப்பினர்களும் ஒன்றாக பிரசன்னமாகியிருப்பதை கண்டு ஜனாதிபதி அஞ்சுகிறார். இதனால் சுதந்திர மக்கள் காங்கிரஸை பிளவுபடுத்த ஜனாதிபதி முயற்சிக்கிறார்.

தமது கூட்டணிக்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும், அரசாங்கத்தை அகற்றுவதற்கு எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து செயல்பட தயாராகவே உள்ளோம்.” எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பரந்துபட்ட கூட்டணியை அமைக்க உள்ளதாக ஜீ. எல். பீரிஸ் அறிவித்திருந்தார். ஆனால், சுதந்திர மக்கள் காங்கிரஸுக்குள் இரு விதமான நிலைபாடுகள் உள்ளன.

உருவாக்கப்படும் கூட்டணியில் பிரதித் தலைவர் பதவியை பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு வழங்க வேண்டுமென டலஸ் தரப்பு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கடந்தவாரம் கோரிக்கை விடுத்திருந்தது.

என்றாலும், சஜித் பிரேமதாஸ இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளார். இதனால் டலஸ் தரப்பு சஜித் மீது அதிருப்தியில் உள்ளது.

என்றாலும், ஜீ.எல்.பீரிஸ் சஜித்துடன் சுமுகமான உறவை கொண்டுள்ளதால் அவர் எதிர்க்கட்சித் தலைமையில் உருவாக்கப்படும் கூட்டணியில் இணைந்து பணியாற்றும் தீர்மானத்தில் உள்ளார்.

இவ்வாறான பின்புலத்திலேயே டலஸை தமது தரப்பிடமிருந்து பிரிப்பதற்கான முயற்சிகளை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளாரென ஜீ.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ)

# எப்போதும் தனி வழிதான்!

## அநுரகுமார அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 21

எதிர்வரும் தேசிய தேர்தல்களில் எவருடனும் கூட்டணியமைக்க தயாரில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வெற்றியோ,தோல்வியோ தேர்தல்களில் தனித்தே போட்டியிடுவோம் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர்களுடன் அண்மையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் உள்ளிட்ட ஜனநாயக ரீதியிலான செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் நாங்கள் கூட்டணியமைக்கவுள்ளதாக வெளியாகியுள்ள செய்தியில் எவ்வித உண்மையுமில்லை. எதிர்வரும் 2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள தேர்தல்களில் தனித்தே போட்டியிடுவோம்.

2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள தேர்தல் அரசியல் ரீதியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும். மக்கள் தேர்தலை கோருகிறார்கள் தேர்தல் ஒன்று இடம்பெற்றால் படுதோல்வியடைய நேரிடும் என்பதை அறிந்தே அரசாங்கம் தேர்தலை தொடர்ந்து பிற்போடுகிறது- என்றார். (அ)

## தமிழக...

கைது செய்தனர். கைதான எட்டு மீனவர்களும் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், குறித்த மீனவர்கள் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

‘எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டால் சிறை தண்டனை விதிக்கப்படும்’ என்ற நிபந்தனையின் கீழ் விடுதலை செய்வதாக நீதிபதி தீர்ப்பளித்தார்.

இதனை தொடர்ந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இந்திய துணைத் தூதரக அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

## பொதுஜன...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சி என்ற ரீதியில் எதிர்வரும் தேர்தல்களில் மிகுந்த பலத்துடன் போட்டியிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.

கட்சிகளுக்கு அனைத்து நாட்டு மக்களுக்கும் நாங்கள் தேர்தலுக்கு தயாராக இருக்கின்றோம் என்பதை கூற விரும்புகின்றோம்.

கட்சி என்ற ரீதியில் அடுத்த ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் யார் என்பதை நாங்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை.

மூன்று அல்லது நான்கு வேட்பாளர்கள் குறித்து நாங்கள் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கின்றோம். அவர்களில் தம்மிக பெரேராவும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தகுதியான நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய திறமையான வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தவே நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். அந்த விடயத்தை கட்சி தீர்மானித்ததும் நாங்கள் அறியத் தருவோம்-என்றார். (அ)

## நாட்டில்...

உறுதிப்படுத்துவது பொதுஜன பெரமுனவின் முதன்மையான கடமையாகும்.

ஒவ்வொரு பொதுமக்களும் தாம் வாக்களிக்கும் அரசியல் கட்சியின் வரிக் கொள்கை மற்றும் கடந்த கால பொருளாதார நடைமுறைகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். அதன் பிரகாரம் மக்கள் தமது முடிவுகளை எடுக்க வேண்டும்.

தேர்தல்கள் நெருங்க நெருங்க, மக்களைக் கண்மூடித்தனமாகவும், சிந்திக்க விடாமலும் பல்வேறு திசைகளில் பிரசாரங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

சமூக ஊடகங்கள் மூலம் மக்களை குழப்பத்துக்கு உள்ளாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை காண்கிறோம்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# முல்லைத்தீவில் கனமழை 6ஆயிரத்து 268 பேர் பாதிப்பு

## 524 பேர் இடைத்தங்கல் முகாம்களில்

முல்லைத்தீவு, டிசெ. 21

**தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2113 குடும்பங்களைச் சேர்ந்த 6268 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 176 குடும்பங்களைச் சேர்ந்த 524 பேர் இடைத்தங்கல் முகாம்களின் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.**



முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் வெளியிடப்பட்ட தகவல் அடிப்படையில் நேற்றுக் காலை 9.30 மணி வரையரான தகவல் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 333 குடும்பங்களைச் சேர்ந்த 1076 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, கருவேலன்கண்டல், இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச்சடம்பன், கூழாமுறிப்பு, கனகரத்தினபுரம், காதலியார்சமணங்குளம் ,பழம்பாசி, தண்டுவான், ஒட்டுசுட்டான், பேராறு, மணவாளன்பட்டமுறிப்பு, கணேசபுரம், முத்துவிநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 592 குடும்பங்களைச் சேர்ந்த 1748 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை , தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு ,கொக்கிளாய் வடக்கு கொக்குத்தொடுவாய் வடக்கு, செம்மலை, தண்ணீறூற்று, கணுக்கேணி மேற்கு, அளம்பில் வடக்கு, மாமூலை, அம்பலவன் பொக்கணை, வண்ணாங்குளம், குமாரபுரம் ,முள்ளியவளை தெற்கு, முள்ளியவளை மேற்கு, அளம்பில் தெற்கு ,உப்புமாவெளி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 450 குடும்பங்களைச் சேர்ந்த 1366 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான், மல்லாவி,யோகபுரம் கிழக்கு, புகழேந்திநகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு, அம்பலப்பெருமாள்குளம், அமைதிபுரம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம்,துணுக்காய், யோகபுரம் மத்தி, திருநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 251 குடும்பங்களைச் சேர்ந்த 765 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு, தேவிபுரம், மாணிக்கபுரம், உடையார்கட்டு வடக்கு,உடையார்கட்டு தெற்கு மற்றும் வள்ளிபுனம் மன்னாகண்டல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 472 குடும்பங்களைச் சேர்ந்த 1277 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2113 குடும்பங்களைச் சேர்ந்த 6268 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் 7 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அனர்த்த நிலைமை ஓரளவு குறைந்து வருகின்ற நிலையில் தற்போது 2 இடைத்தங்கல் முகாம்களில் 176 குடும்பங்களை சேர்ந்த 524 பேர் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு ஊழியர்கள், பிரதேச சபை ஊழியர்கள் ,சுகாதார ஊழியர்கள், இராணுவத்தினர், கிராம அலுவலர்கள்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் மக்களுக்கான சமைத்த உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# பிரிட்டனில் வீதி விபத்தில் உயிரிழந்த இலங்கையர்!



கொழும்பு, டிசெ. 21

பிரித்தானியாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இலங்கை இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர் பில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என அவரின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நொட்டிங்காம் ட்ரெண்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற 31 வயதான ஓஷத ஜயசுந்தர என்ற இலங்கை மாணவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்நிலையில், இலங்கையில் வசிக்கும் அவரது குடும்பத்தினர், தங்கள் இதயங்கள் துக்கத்தால் கனத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 27 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக நான்கு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆபத்தான முறையில் வாகனம் ஓட்டி மரணத்தை ஏற்படுத்தியமை, காப்பீடு இல்லாமல் வாகனம் ஓட்டி மரணத்தை ஏற்படுத்திமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுகளை சந்தேகநபர் எதிர்கொண்டுள்ளார்.

ஓஷத ஜயசுந்தர மிகவும் அர்ப்பணிப்புள்ள ஒருவர் என சக நண்பர்கள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் ஓஷதவின் குடும்பத்தினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

“எங்கள் அன்புக்குரிய குடும்ப உறுப்பினரான ஓஷத ஜயசுந்தர ஒரு விபத்தில் உயிரிழந்தார் என்ற பேரழிவு செய்தியை நாங்கள் ஆழ்ந்த வருத்தத்துடன் பகிர்ந்து கொள்கிறோம்.

இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்தை நாங்கள் புரிந்து கொள்ளும்போது எங்கள் இதயங்கள் துக்கத்தால் கனமாக இருக்கின்றது.

நொட்டிங்ஹாம்சயர் பொலிஸ் அதிகாரிகள், நொட்டிங்ஹாம் ட்ரெண்ட் பல்கலைக்கழக ஊழியர்கள், மரண விசாரணை அலுவலகம், பிரித்தானியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம், இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் சக நண்பர்கள் என அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த சவாலான காலங்களில் அவர்களின் அசைக்க முடியாத ஆதரவும் வழிகாட்டுதலும் மிகவும் பலமாக இருந்து வருகிறது.

எதிர்காலத்தில் இதுபோன்ற துரதிர்ஷ்டவசமான சோகத்தை யாரும் சந்திக்கக் கூடாது.

ஓஷதாவின் நினைவைப் போற்றும் வகையில் இந்த விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.” என தெரிவித்துள்ளனர். (அ)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிலையங்கள் மூடப்படும்

## பெற்றோலிய பிரிப்பாளர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 21

பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்குப் பின்னர் மூடப்படும் என பெற்றோலிய பிரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 238 சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படவுள்ளதாக அது குறிப்பிடப்பட்டுள்ளது.

சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தற்போது பெறும் 2.75 வீத தரகுப் பணத்தில் 35 வீதத்தை புதிய மாதாந்த விநியோகஸ்தர் கட்டணமாக வசூலிப்பதற்கு கூட்டுத்தாபனம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

குறித்த தொகையை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்தாத நிலையில், அன்று முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படமாட்டாது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையை 12 மாத தவணையாகச் செலுத்துவதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த மாதாந்த கட்டணம் மற்றும் நிலுவைத் தொகையைச் செலுத்தத் தவறும் நிலையில், முன்னறிவிப்பு இன்றி எரிபொருள் விநியோகத்தை நிறுத்துவோம் என பெற்றோலியப் பிரிப்பாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# டெங்கு நோயின் தாக்கம் வடக்கு-கிழக்கில் அதிகம்

கொழும்பு, டிசெ. 21

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனடிப்படையில் கொழும்பு மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேசங்கள் இதில் முதல் இடங்களைப் பிடிக்கின்றன. மேலும், டெங்கு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அறிவூட்டல் இன்மையே இதற்கு பிரதான காரணம் எனவும் கூறலாம் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் சிரேஸ்ட்ட வைத்திய அதிகாரி சுசுத் சமரவீர தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதனடிப்படையில் கொழும்பு மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேசங்கள் இதில் முதல் இடங்களைப் பிடிக்கின்றன. மேலும், டெங்கு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அறிவூட்டல் இன்மையே இதற்கு பிரதான காரணம் எனவும் கூறலாம்.

பொதுவாக இலங்கையில் டெங்குவின் தாக்கம் ஆரம்பகாலங்களில் மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

கடந்த 2017ஆம் ஆண்டு திடீரென ஏற்பட்ட டெங்கு அதிகரிப்பின் பின், இந்த நோய் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்தது. அதன் பின்னரான காலப்பகுதியில் 2022ஆம் ஆண்டு தான் டெங்குவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது.

ஆனாலும், இவ்வாண்டு ஏற்பட்டு காலநிலை மாற்றம் காரணமாக நாட்டில் டெங்குவின் தாக்கம் மிகவும் மோசமாக அதிகரித்து செல்கின்றது.

ஆகவே, டெங்கின் அறிகுறிகள் இருப்பின் தவறாது சிகிச்சை நிலையங்களுக்கு சென்று பரிசோதனை செய்துக்கொள்வது சிறந்தது. காரணம் டெங்கு நோய் வெறுமனே மருந்து எடுத்து கொண்டு வீட்டில் ஓய்வெடுக்கும் நோய் அல்ல. 24 மணிநேரமும் கண்காணிக்கப்பட வேண்டிய நோயாகும்.

தற்போது வரை கொழும்பு மாவட்டத்தில் 17604 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் கம்பஹா மாவட்டத்தில் 15720 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கண்டி மாவட்டத்தில் 8634பேரும் களுத்துறை மாவட்டத்தில் 5006பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு மாத்திரம் 49பேர் வரை டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு - கிழக்கை பொருத்தவரை தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அதிகமாக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். காலப்போக்கில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஐ. பி. எல். மினி ஏலம்:

# அணிகள் வாங்கிய வீரர்கள் யார்?

டுபாய், டிசெ. 21

ஐ. பி. எல். மினிஏலத்தில் அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்ராரக்கை 24.75 கோடி இந்திய ரூபாய்க்கு ஏலம் எடுத்து அனைவரையும் வியக்க வைத்துள்ளது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி.

2024-ம் ஆண்டு ஐ. பி. எல். தொடருக்கான மினி ஏலம் நேற்றுமுன்தினம் டுபாயில் நடைபெற்றது. 333 வீரர்களை உள்ளடக்கிய பட்டியலில் இருந்து 10 அணிகளும் தங்களுக்கு நிரப்பப்பட வேண்டிய இடங்களை பூர்த்தி செய்தனர்.

அவுஸ்திரேலிய அணியின் இடது கை வேகப்பந்து வீச்சாளரான மிற்செல் ஸ்ராரக்கை ஏலம் எடுப்பதில் குஜராத் ரைட்டன்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் இடையே கடும் போட்டி நிலவியது. இறுதியில் மிற்செல் ஸ்டாரக்கை ரூ .24.75 கோடிக்கு வாங்கியது கொல்கத்தா அணி.

இதன் மூலம் ஐ. பி. எல். வரலாற்றில் அதிக தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்ட வீரர் என்ற சாதனையை படைத் துள்ளார் மிற்செல் ஸ்ராரக். இதற்கு முன்னர் கடந்த ஆண்டு இங்கிலாந்தின் சகலதுறை வீரர் சாம் கரனை, பஞ்சாப் கிங்ஸ் அணி ரூ.18.50 கோடிக்கு ஏலம் எடுத் திருந்ததே அதிகபட்சமாக இருந்தது.

நேற்று முன்தினம் அணிகள் ஏலம் எடுத்த வீரர்களின் விவரம் முழுமையாக வருமாறு,



### சன் ரைசர்ஸ்

அவுஸ்திரேலிய அணியின் தலைவரான பட் கம்மின்ஸை சன் ரைசர்ஸ் அணி ரூ .20.50 கோடிக்கு வாங்கியது. இதன் மூலம் ஐபிஎல் வரலாற்றில் 2ஆவது அதிகபட்ச தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்ட வீரர் ஆனார் கம்மின்ஸ்.

அவுஸ்திரேலிய அணியின் தொடக்க வீரரான டிரா விஸ் ஹெட்டை ரூ.6.80 கோடிக்கும், இந்திய வேகப் பந்து வீச்சாளர் ஜெயதேவ் உனத்கட்டை ரூ.1.60 கோடிக்கும், இலங்கை அணியின் சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்காவை ரூ.1.50 கோடிக்கும், இந்திய பந்து வீச்சாளர் ஆகாஷ் சிங்கை ரூ.20 இலட்சத்துக்கும் ஏலம் எடுத்தது.

### சென்னை சுப்பர் கிங்ஸ்

நியூஸிலாந்து அணியின் டரில் மிற்செல்லை ரூ.14 கோடிக்கும், இந்திய அணியின் ஷர்துல் தாகூரை ரூ. 4 கோடிக்கும், பங்களாதேஷின் முஸ்டாபிஸூர் ரஹ்மானை ரூ. 2 கோடிக்கும், நியூஸிலாந்தின் ரச்சின் ரவீந்திராவை ரூ.1.80 கோடிக்கும், ஏலம் எடுத்தது.

தொடர்ந்து இந்தியாவை சேர்ந்த சமீர் ரிஸ்வியை ரூ.8.40 கோடிக்கு வாங்கியது. ரூ. 20 இலட்சம் அடிப் படை தொகையை நிர்ணயிக்கப்பட்டிருந்த அவரை ஏலம்எடுப்பதில் குஜராத், சென்னை, டில்லி என மும்முனைபோட்டி நிலவியது.

### டில்லி கப்பிட்டல்ஸ்

டில்லி கப்பிட்டல்ஸ் அணி இந்திய அணியின் யு-19 வீரரான குமார் குஷாக்ராவை ரூ.7.20 கோடிக்கும், அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜே ரிச்சர்ட்சனை ரூ. 5 கோடிக்கும் இங்கிலாந்து துடுப் பாட்ட வீரரான ஹறி புருக்கை ரூ. 4 கோடிக்கும் இந்தி யாவின் சுமித் குமாரை ரூ.1 கோடிக்கும் தென்னாபிரிக் காவின் டிரிஸ்டன் ஸ்டப்ஸை ரூ. 50 இலட்சத்துக்கும், விக்கெட் காப்பாளர் ரிக்கி புயியை ரூ. 20 இலட்சத் துக்கும், பந்து வீச்சாளர் ரஷிக் தாரை ரூ. 20 இலட்சத் துக்கும் ஏலம் எடுத்தது.

### குஜராத் ரைட்டன்ஸ்

அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்பென் சர் ஜோன்சனை ரூ. 10 கோடிக்கும் தமிழகத்தைச் சேர்ந்த சகலதுறை வீரரான ஷாருக்கானை ரூ.7.40 கோடிக்கும், இந்திய வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவை ரூ. 5.80 கோடிக்கும், விக்கெட் காப்பாளர் ரொபின் மின்ஸை ரூ.3.60 கோடிக்கும், பந்துவீச்சாளர்களான சுஷாந்த் மிஷ்ராவை ரூ. 2.20 கோடிக்கும், கார்த்திக் தியாகியை ரூ.60 இலட்சத்துக்கும், ஆப்கானிஸ்தானின் அஸ்ம துல்லா ஓமர்ஸாயை ரூ. 50 இலட்சத்துக்கும், இந்திய பந்து வீச்சாளர் மானவ் சுதாரை ரூ. 20 இலட்சத்துக்கும் வாங்கியது.

### லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ்

இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஷிவம் மாவியை ரூ.6.40 கோடிக்கு வாங்கியது. தொடர்ந்து இந்திய பந்து வீச்சாளர் எம். சித்தார்த்தை ரூ.2.40 கோடிக்கும், இங்கி லாந்து அணியின் சகலதுறை வீரர் டேவிட் வில்லியை ரூ. 2 கோடிக்கும், அவுஸ்திரேலியாவின் அஷ்டன் ரர்னரை ரூ.1 கோடிக்கும், இந்தியாவின் அர்ஷின் குல்கர்னியை ரூ .20 லட்சத்துக்கும் ஏலம் எடுத்தது.

### மும்பை இந்தியன்ஸ்

தென்னாபிரிக்காவின் ஜெரால்ட் கோட்ஸியை ரூ.5 கோடிக்கும், இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் நுவான் துஷாராவை ரூ. 4.80 கோடிக்கும், இலங்கை வேகப்பந்து வீச்சாளர் தில்ஷான் மதுஷங்காவை ரூ. 4.60 கோடிக்கும், இந்திய பந்து வீச்சாளர் ஸ்ரேயஸ் கோபால், அன்ஷுல் கம்போஜ், நமன் திர் ஆகியோரை தலா ரூ. 20 இலட்சத்துக்கும் ஏலம் எடுத்தது.

### பஞ்சாப் கிங்ஸ்

இந்தியாவின் ஹர்ஷால் படேலை ரூ.11.75 கோடிக்கும், இங்கிலாந்தின் கிறிஸ் வோக்ஸை ரூ. 4.20 கோடிக்கும் ஏலம் எடுத்தது. தொடர்ந்து இந்தியாவின் தனய் தியாகராஜன், விஷ்வநாத் பிரதாப் சிங், அசுதோஷ் சர்மா, சஷாங்க் சிங் ஆகியோரை தலா ரூ.20 லட்சத்துக்கு வாங்கியது.

### ராஜஸ்தான் றோயல்ஸ்

மேற்கு இந்தியத் தீவுகளின் ரோவ்மன் பவலை ரூ.7.40 கோடிக்கும், இந்தியாவின் ஷிவம் துபேவை ரூ. 5.80 கோடிக்கும், இங்கிலாந்து விக்கெட் காப்பாளரான ரொம் கோஹ்லர்-காட்மோரை ரூ. 40 லட்சத்துக்கும் ஏலம் எடுத்தது.

### றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்

மேற்கு இந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அல்ஸாரி ஜோசப்பை ரூ.11.50 கோடிக்கும், இந்திய பந்து வீச்சாளர் யாஷ் தயாளை ரூ.5 கோடிக்கும், இங்கிலாந்து அணியின் ரொம் கரனை ரூ.1.50 கோடிக்கும் வாங்கியது.

# இந்தியாவை வீழ்த்தியது தென்னாபிரிக்கா



கேப்டவுன், டிசெ. 21

தென்னாபிரிக்க மற்றும் இந்திய கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றுள்ளது தென்னாபி ரிக்க கிரிக்கெட் அணி.

இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது. 46.2 ஓவர்களில் 211 ஓட்டங்கள் எடுத்து சகல விக் கெட்களையும் இழந்தது இந்தியா.

212 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை தென்னாபிரிக்கா விரட்டியது. விக் கெட் இழப்பின்றி அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் 130 ஓட்டங்களுக்கு இணைப் பாட்டம் அமைத்தனர். ரீசா ஹென்ரிக்ஸ் 52 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து துடுப்பெடுத்தாடி வந்த வான்டர் டூசன் 36 ஓட்டங்களில் வெளியேறினார்.

ஜோர்ஸி, 122 பந்துகளில் 119 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். 42.3 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 215 ரன்கள் எடுத்தது தென்னாபி ரிக்கா. இந்த வெற்றியின் மூலம் 1-1 என்ற கணக்கில் இந்த தொடர் சமனில் உள்ளது. முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றிருந்தது.

முன்னதாக, முதல் இன்னிங்ஸில் இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய ருதுராஜ் கெய்க்வாட் 2ஆவது பந்திலேயே எல். பி. டபள்யூ முறையில் விக்கெட்டானார். சாய் சுதர்ஷன் - திலக் வர்மா இணைந்து 11 ஓவர் வரை விக்கெட் இழப்பில்லாமல் கொண்டு சென்றனர்.

நந்த்ரே பர்கர் வீசிய 12-வது ஓவரில் திலக் வர்மா 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த கே. எல். ராகுல் - சாய் சுதர்ஷனுடன் இணைப்பாட்டம் அமைக்க இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அதிரடி காட்டிய சாய் சுதர்ஷனை, லிசாட் வில்லயம்ஸ் விக்கெட்டாக்கினார். 83 பந்துகளில் 62 ஓட்டங்களை குவித்து பெவிலியன் திரும்பினார் சுதர்ஷன்.

தொடர்ந்து வந்த சஞ்சு சாம்சன் 12 ஓட்டங்களில் கிளம்பினார். நிலைத்து ஆடிய கே. எல். ராகுல் 56 ஓட்டங்களில் கிளம்ப 36 ஓவர் முடிவில் 5 விக்கெட் களை இழந்த இந்திய அணி 168 ஓட்டங்களை சேர்த்தி ருந்தது. அதன் பின்னர் வந்த வீரர்கள் தென்னாபிரிக்க பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறினர்.

ரிங்கு சிங் 17 ஓட்டங்கள், குல்தீப் யாதவ் ஓர் ஓட்டம், அக்சர் படேல் 7, அர்ஷ்தீப் சிங் 18 என சொற்ப ஓட்டங் களில் திணறியது இந்திய அணி. 46.2ஆவது ஓவரில் அவேஷ் கான் 9 ஓட்டங்களில் ரன்அவுட்டாக இந்திய அணி 211 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

தென்னாபிரிக்கா தரப்பில், நந்த்ரே பர்கர் அதிகபட் சமாக 3 விக்கெட்களையும் பியூரன் ஹென்ட்ரிக்ஸ், கேசவ் மகராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், லிசாட் வில்லயம்ஸ், அய்டன் மார்க்ரம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

(ஐ)

## காசாவில் போருக்கு பின்னரான தீர்வு:

# அரபு -சர்வதேச அமைதிப்படை? மீண்டும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

காசாவில் போருக்கு பின்னரான தீர்வுத் திட்டம் என்னவாக இருக்கும் என்பதில் பல்வேறு ஊகங்கள் எழுந்துள்ளன. மேற்கு கரை போன்ற பாலஸ்தீனிய அதிகாரம் திரும்புதல், அல்லது அரபு - சர்வதேச இராணுவ அமைதிப்படை பிரசன்னம் அல்லது இஸ்ரேலிய மறு ஆக்கிரமிப்பு ஆகிய அனைத்தும் காசாவின் எதிர்காலத்திற்கான திட்டங்கள் என இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**அரபு -சர்வதேச அமைதிப்படை :**

ஆயினும் அரபு - சர்வதேச அமைதிப்படை பிரசன்னத்தை விட மீள இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு நிகழ்ச்சி நிரலே சாத்தியமாக இடமுண்டு.

காசா போரின் உடனடி தாக்கம் என்பது, மத்திய கிழக்கு முழுவதும் மேலும் பரவும் பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கும் என்றே முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

ஹமாஸ் அமைப்பு தெற்கு இஸ்ரேலில் ஊடுருவி தாக்கிய பிறகு, போரில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கு முக்கிய கேள்வியாக, காசாவின் எதிர்காலத்தில் கவனம் செலுத்துவது இப்போது மிகவும் முக்கியமானது.

போர் முடிவின்பிறகு காஸாவில் என்ன அரசியல் ஒழுங்கு உருவாகும் என்பது தெளிவாக இல்லை. எவ்வாறாயினும், அமெரிக்க வெள்ளை மாளிகை தரப்பில் பாலஸ்தீனிய அதிகார சபையின் பிரதிநிதிகள் முன்னணி பாத்திரத்தை வகிப்பது முக்கியம் என்று ஜோ பைடன் நிர்வாகம் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஆயினும் காசா பகுதிக்குள் இஸ்ரேல் புகுந்து ஹமாஸிடம் இருந்து கைப்பற்றுவது சட்டபூர்வமற்றதாகவே பல அரபு நாடுகள் கருதுகின்றன.

இந்த யுத்தம் முடிவடைந்தவுடன் காசாவில் ஹமாஸுக்குப் பதிலாக பாலஸ்தீனிய அதிகார சபையின் மஹ்மூத் அப்பாஸ் தலைமை ஏற்கக்கூடிய சாத்தியக்கூறுகளை பைடன் அரசு சுட்டிக்காட்டி உள்ளது. இருப்பினும், இந்த யோசனை மிகவும் சிக்கலானது ஆகும். காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களில் ஒரு சிறிய சதவீதத்தினர் மட்டுமே அப்பாஸின் அரசுக்கு ஆதரவு என தெரிவிக்கின்றனர்.



**காசாவில் அப்பாஸ் ஆதரவு இல்லை:**

அக்டோபர் 7 ஆம் தேதி நடந்த திடீர் தாக்குதலுக்கு இஸ்ரேலின் பதிலடியின் எதிர்பாராத விளைவுகளில் ஒன்று, பல ஆண்டுகளாக மேற்குக் கரையில் ஆதரவை இழந்து வரும் அப்பாஸின் ஃபத்தா கட்சியின் ஆதரவு இன்னமும் குறைவதாகும். ஆனாலும் ஹமாஸின் புகழ் அதிகரித்தது என்பது உண்மையே.

அமெரிக்கா, இஸ்ரேலால் நியமிக்கப்பட்டவர் என்றும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் ஊழல் வேலைக்காரன் ‘அப்பாஸ்’ என்று பாலஸ்தீனியர்களிடையே பெயரைப் பெற்றுள்ளார். இதன் விளைவாகவே ஆளும் ஃபத்தாவின் பிரபல்யத்தில் பாரிய சரிவு ஏற்பட்டது.

மஹ்மூத் அப்பாஸ் ஒரு பாலஸ்தீனியத் தலைவராகினும், முற்றிலும் பயனற்றவர், மேலும் அவர் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிடமிருந்து உத்தரவை ஏற்றுக்கொள்கிறார் என்ற குற்றச்சாட்டும் பரவலாக உள்ளது.

பாலஸ்தீனியர்களுக்கு எதிரான யூத குடியேற்றவாசிகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைத் தடுக்க இஸ்ரேல் எந்தவிதமான கட்டுப்பாட்டையும் காட்டாதபோது அல்லது இஸ்ரேலுடனான ஒத்துழைப்பால் மஹ்மூத் அப்பாஸ் அரசால் என்ன நன்மைகள் உள்ளன என்ற

**காசாவில் அரபு -சர்வதேச அமைதிப்படை பிரசன்னத்தை விட மீள இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு நிகழ்ச்சி நிரலே சாத்தியமாக இடமுண்டு.**




பாலஸ்தீன மக்களின் ஆவேசமும் உள்ளது.

இந்த இக்கட்டான சமீபத்திய ஆண்டுகளில் மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதன் பிரதிபலிப்பாக, காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் மஹ்மூத் அப்பாஸ் அரசு ஆட்சியை ஏற்க காணும் வாய்ப்பு அதிகம் என்றே கருதுகின்றனர்.

ஆயினும் ஜனநாயக வழியில் காஸாவில் பாலஸ்தீனியர்களால் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவு என்றே கருதப்படுகிறது.

காசா நகரில் இஸ்ரேலிய தாக்குதல்களால் ஏற்பட்ட அழிவின் மத்தியில் இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளிலிருந்து அகதிகளாக அல்லடப்படும் வேளையில், எந்த ஒரு அரபு நாட்டின் இராணுவமும் உதவ இல்லை என்ற ஆதங்கமும் உண்டு.

**போருக்கு பிந்திய நிர்வாகம்:**

காசாவில் போருக்குப் பிந்தைய நிர்வாகத்தை நிர்வகிக்கும் அரபு-சர்வதேச அமைதிப்படை பற்றி சில எண்ணங்கள் உள்ளன. ஆனால் அரபு நாடுகளின் கண்ணோட்டத்தில், பாலஸ்தீனத்தை இஸ்ரேலும் அதன் மேற்கத்திய ஆதரவு அரசுகளுமே நிர்வாகிக்க வேண்டிய நெருக்கடி என்றும், அதை நிர்வகிப்பது அரபு நாடுகளின் பொறுப்பல்ல என்ற கண்ணோட்டமும் உள்ளது.

மேலும், காசாவின் பாதுகாப்பு பொறுப்பில் அமர்த்தப்படும் எந்தவொரு அமைதிக்கான அரேபிய இராணுவப் படையும் பெரும் ஆபத்துக்களுக்கு உட்படும். பஹ்ரைன், எகிப்திய, அல்லது ஜோர்டானியப் படைகள் இஸ்ரேலின் பங்காளிகளாகவோ மாற வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்ற அச்சமும் உள்ளது.

இதனாலேயே போருக்குப் பிந்தைய காசா ஆளுகையின் பொறுப்பை அரபு - சர்வதேச அரசுகள் ஏற்றுக்கொள்வதில் சாத்தியங்கள் அரிதாக உள்ளன. காசாவில் தற்போதைய மோதலுக்குப் பிறகு பொதுமக்கள் இன்னும் அதிகமாக ஆத்திரத்துடன் இருக்கும் தருணத்தில், காசா ஆளுகையின் பொறுப்பை அரபு - சர்வதேச அரசுகள் ஏற்றுக்கொள்வதை எப்படி ஏற்றுக் கொள்வார்கள் என்ற சந்தேகங்களும் உள்ளன.

காசாவில் மனிதாபிமான தேவைகள் அதிகமாக இருக்கும் வேளையில், மக்கள் ஆத்திரம் மற்றும் வெறுப்பு நிறைந்தவர்களாக உள்ளார்கள்.

டிசம்பர் மாத தொடக்கத்தில் பஹ்ரைனில் நடந்த ஐஐஎஸ்எஸ் பாதுகாப்பு உச்சி மாநாட்டில் ஜோர்டானின் வெளியுறவு மந்திரி அய்மன் சஃபாடி பேசுகையில், காசாவிற்கு அரபு துருப்புக்கள் எதுவும் செல்லாது என்றும் அரபு நாடுகளை பாலஸ்தீன பொதுமக்கள் எதிரிகளாக பார்க்க வேண்டிய தேவையில்லை என்றும் வலியுறுத்தினார்.

அரபு அமைதிப்படை பற்றிய யோசனை நிராகரிக்கப்பட வேண்டும் என்பதில் அரபு அரசாங்கங்கள் முழுதாக உடன்படுகின்றன என்று அம்மானின் தலைமை இராஜதந்திரி வலியுறுத்தினார். இந்த யோசனையை ஏற்பது இஸ்ரேலின் அரசாங்கத்திற்கு அரபு நாடுகள் உங்கள் குழப்பத்தை சுத்தம் செய்ய தயாராக இருப்பதாக தவறான செய்தியை அனுப்பும் எனவும் கூறினார்.

**காசாவை இஸ்ரேல் மீண்டும் ஆக்கிரமிப்பு:**

பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாஹூவின் தீவிர வலதுசாரி அரசாங்கம், காசா ஆளுகையின் எதிர்காலத்தில் இஸ்ரேல் நேரடிப் பங்கை வகிப்பதைப் பற்றிக் குரல் கொடுத்துள்ளது.

ஆயினும் ஹமாஸுக்குப் பிந்தைய காலகட்டத்தில், காசா மீதான நேரடி இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு திரும்பக் கூடாது என்று அமெரிக்க பைடனின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

6,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட குறைந்தது 18,000 பாலஸ்தீனியர்கள் காசாவில் அக்டோபர் 7 முதல் இஸ்ரேலால் கொல்லப்பட்டுள்ளனர்.எனவே, இஸ்ரேல் காசாவில் தனது இராணுவப் பிர சன்னத்தை நிலைநிறுத்துவதில் உறுதியாக இருந்தால், காசாவின்




எதிர்காலத்தில் தொடர் வன்முறை மற்றும் ஆயுதமேந்திய எதிர்ப்பிற்கான செய்முறைக்கு வழிவகுக்கும். இதுவே இஸ்ரேலின் இராணுவத்திற்கு தொடர்ந்து உயிரிழப்புகளை ஏற்படுத்தும்.

இஸ்ரேல் ஏற்கனவே நிலத்தை ஆக்கிரமித்துள்ளது, ஆனால் ஒரு தந்திரோபாய ஆக்கிரமிப்பு என்பது அமைதிக்கான வெற்றியிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. அமைதி அங்கே திரும்புவது வெகு தொலைவில் தான்.

நிலைமை சீரடைவதற்கு நீண்ட காலம் ஆகும், என்று மிலனை தளமாகக் கொண்ட சர்வதேச அரசியல் ஆய்வுகள் நிறுவனத்தின் அறிக்கை விளக்கியுள்ளது.

இறுதியில், காசாவில் போருக்குப் பிந்தைய நிலைமைக்கு இஸ்ரேலிய தலைமை ஒரு தெளிவான, யதார்த்தமான மூலோபாயத்தை வகுக்கத் தவறிவிட்டது என்று உறுதியாகக் கூறலாம்.

அதேவேளை பாலஸ்தீனியர்கள் அழிக்கப்பட்ட பகுதிக்கு திரும்ப முடியாது. அத்தகைய மறுசீரமைப்புக்கான பொருளாதார பலம் அவர்களிடம் இல்லை. எனவே, அவர்கள் எங்கு வாழ வைக்கப்படுவார்கள் என்பதும் பாரிய ஒரு கேள்விக்குறியாகும்.

சர்வதேச சமூகம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் பாலஸ்தீன பிரச்சினைக்கு இரு நாடுகளின் தீர்வு குறித்து அக்கறை காட்டுகின்றனவா என்பதும் சந்தேகத்துக்குரியதாக உள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய கொள்கை வகுப்பாளர்கள் ஹமாஸை மோதலுக்குக் காரணம் என்று மதிப்பிடுகிறார்கள். மோதலுக்கு ஹமாஸ் மட்டும் காரணம் அல்ல. பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலை எதிர்க்கக் காரணமான அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காமல், காசாவிலோ அல்லது இஸ்ரேலிலோ எந்த நேரத்திலும் அமைதி இருக்காது என்பது வரலாற்றுப் பாடமாகும்.

காசாவில் இன்னோர் ‘நக்பா’ என்ற திட்டத்தை நிறைவேற்ற தற்போதைய இஸ்ரேலிய அரசாங்கம் முயலுமா என்பது பற்றி இப்போது கூற முடியாது விட்டாலும், இஸ்ரேல் அடைய விரும்பும் இன அழிப்பு இலக்குகள் ஆபத்தானவையாக தெரிகிறது. ●

# "மயிலத்தமடு மேய்ச்சல் தரை பிரச்சினை" அரசாங்கத்துக்கும் ஆட்சிமுறைக்கும் அமிலப்பரீட்சை!






**பேராசிரியர் தங்கமுத்து ஜெயசிங்கம்**

கிழக்கு மாகாணத்தில் மேய்ச்சல் தரையாக அமைச்சரவையினால் 2011 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட மயிலத்தமடு - மாதவனை நிலங்கள் மீது தங்களுக்கு இருக்கும் உரிமைக்காக சித்தாண்டியில் கால்நடை வளர்ப்பாளர்களான தமிழர்கள் நடத்திவரும் அமைதிவழிப் போராட்டம் மூன்று மாதங்களையும் கடந்து நீடிக்கிறது.

தொடரும் நில அபகரிப்பு காரணமாக எண்பதுக்கும் அதிகமான கால்நடைகள் களவாடப்பட்டிருக்கின்றன அல்லது கொல்லப்பட்டிருக்கின்றன. அது தொடர்பில் உருப்படியான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் குவிந்துகிடக்கின்றன. சில முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு பொலிசார் மறுக்கிறார்கள். இதுவே மயிலத்தமடு - மாதவனை மேய்சசல் தரை நெருக்கடியின் கதையின் சுருக்கமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக 2023 அக்டோபர் 7 ஆம் திகதி அளவில் இரு பொலிஸ் காவல் நிலைகள் அமைக்கப்பட்ட பின்னரும் கூட இந்த அநீதியான நிலைவரம் தொடருகிறது. செங்கலடியில் உள்ள மக்களுக்கு நீதி வழங்குவதாக 2023 அக்டாபர் 8 ஜனாதிபதி அறிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துமீறி நிலத்தை அபகரித்தவர்களில் 13 பேரை அப்புறப்படுத்துமாறு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் 2023 நவம்பரில் உத்தரவிட்டது. அத்துமீறல்காரர்களை வெளியேற்றுவதாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை 2022 ஜூலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உத்தரவாதம் அளித்தது. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

இது ஆட்சிமுறையினதும் நிருவாகத்தினதும் அலட்சியத்தை அல்லது தகுதியின்மையை அல்லது சிறுபான்மையினத்தவர்களுக்கான நீதியை மலினப்படுத்தும் அதன் கொள்கையையே வெளிக்காட்டுகிறது.

போரின்போது மரணமடைந்தவர்களை இரு வாரங்களுக்கு முன்னர் நினைவுகூர்ந்த மக்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதில் பொலிசார் இறங்கியிருக்கிறார்கள். விடுதலை புலிகளை, தனிநாட்டை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர்களும் அரசாங்க தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் பேசுகிறார்கள். ஆனால் அந்த மக்களின் உரிமைகளுக்க்காக குரல்கொடுக்க எவரும் இல்லை.

மாவட்டத்துக்கு வெளியில் உள்ளவர்கள் தங்களது நிலங்களை அபகரிப்பதற்கு வரமுடியாமல் இருந்த காலப்பகுதியை இந்த மக்கள் ஒரு பொற்காலம் என்று தொடர்ந்தும் நினைப்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? நிலங்களை அபகரித்து கால்நடைகளை கொலை செய்கின்றவர்களிடம் இருந்து இந்த மக்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பை வழங்கவில்லை. பாதுகாப்பை வழங்க வேண்டிய அதன் கடமையை அரசாங்கம் வேண்டுமென்றே உதாசீனம் செய்கிறது.

பயிர்ச்செய்கை நிலங்களில் மேய்வதற்கு கால்நடைகளை அனுப்பக்கூடாது என்றும் அவ்வாறு செய்யத் தவறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உத்தரவிடும் மாவட்ட அதிகாரிகள் (அரசாங்க அதிபர் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் போன்றோர்) உண்மையில் தற்போது அங்கு என்ன



நடக்கிறது என்பதை வசதியாக அலட்சியம் செய்கிறார்கள் போன்று தோன்றுகிறது.

அதேவேளை, தற்போது மேய்ச்சலுக்கு என்று சட்டபூர்வமாக ஒதுக்கப்பட்ட இடங்களில் அத்துமீறிப் பிரவேசித்ததாக விவசாயிகளுக்கு எதிராக வனத் திணைக்களம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறது.

இன்னொரு வனத் திணைக்கள அதிகாரி இந்த நிலங்கள் எல்லாம் மகாவலிக்கு சொந்தமானவை என்றும் அவற்றின் மீது தங்களுக்கு எந்த நியாயாதிக்கமும் கிடையாது என்றும் அறிவித்திருக்கிறார். சொல்லும் செயலும் வேறாக இருக்கும் இத்தகைய குழப்பகரமான சூழ்நிலையில் கால்நடை வளர்ப்பாளர்களினதும் அவர்களது குடும்



பங்களினதும் வாழ்க்கை பெரும் அவலத்துக்குள்ளாகியிருக்கிறது. அதேவேளை இந்த பகுதியில் எதுவும் நடக்காதது போல நாட்டின் ஏனைய பாகங்களில் மக்கள் எந்த அக்கறையும் இன்றி இருக்கிறார்கள்.

தேசிய நல்லிணக்கத்தின் முக்கியத்துவம் குறித்தும் அதில் அரசாங்கத்தின் பற்றுறுதி குறித்தும் ஐக்கிய நாடுகள், பிரிட்டிஷ் பாராளுமன்றம், இலங்கைப் பாராளுமன்றம் மற்றும் பல இடங்களிலும் இனிப்பாக பேசப்படுகிறது. ஆனால், அடிமட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவரும் நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை.

நீதித்துறை (மாஜிஸ்திரேட் நீதிமன்றம், மேல் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம்) தீர்ப்புகளை வழங்குவதுடனும் உத்தரவுகளை பிறப்பிப்பதுடனும் நின்றுகொள்கிறது. ஆனால் சட்டங்களை நடைமுறைப் படுத்துதல் நீதித்துறையைக் கடந்து சென்றுவிடுகிறது போன்று தெரிகிறது.

இத்தகைய பின்புலத்தில், பரவலாக கிளப்பப்படும் முக்கியமான ஒரு கேள்வி "அவர்கள் இந்த நாட்டுக் குடிமக்களா?".

ஒருவரை எது ஒரு குடிமகனாக்குகிறது? "மக்களின் அதிகாரம் தான் அரசிடம் ஒப்படைக்கப்படுகிறது" என்று அரசியலமைப்பு தெளிவாகக் கூறுகிறது. ஆனால் மக்களைப் பொறுத்தவரை அரசு எங்கே இருக்கிறது? மட்டக்களப்பின் இந்த கால்நடை வளர்ப்பாளர்களின் அவலத்துக்கு அரசே பொறுப்பு. அரசின் 'ராடருக்குள்" அவர்கள் இல்லை என்றே தெரிகிறது. இந்த மக்களின் உயிர்களும் சக்தியும் நம்பிக்கையும் போகும்போது அவர்கள் என்ன ஒரு பெரிய எடுப்பிலான இறுதிச் சடங்கிற்காகவா காத்திருக்கிறார்கள்?

காணாமல் போனவர்கள் பற்றி எதுவும் பேசப்படுவதாக இல்லை. பல தசாப்தங்கள் கடந்துவிட்டன. காணாமல் போனவர்களின் உறவினர்களின் போராட்டம் யாழ்ப்பாணத்தில் 2000 நாட்களைக் கடந்துவிட்டது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் விவகாரம் கமிட்டிகள், ஆணைக்குழுக்களில் தொடருகிறது. அதற்கும் ஒரு நாள் காணாமல் போனவர்களின் கதியே நேரும்.

தங்களது வாழ்நாளில் நாட்டுப்பிரிவினையை ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்று கூறிய அமைச்சர்கள் எங்கே போய்விட்டார்கள்? ஏற்கெனவே பிரிவினை இடம்பெற்றுவிட்டது.

பிரிவினை என்பது பௌதீக ரீதியான நிலப்பிரிவினை அல்ல. மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் அலட்சியப்படுத்தப்படுவதில் பிரிவினை நடைமுறையில் இருக்கிறது. விவாகரத்து என்பது கணவனையும் மனைவியையும் வெவ்வேறு வீடுகளில் வாழச் செய்வதல்ல. ஒரே வீட்டில் ஒரே அறையில் இருந்தாலும் கூட அவர்கள் பிரிந்து வாழமுடியும்.

இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் குடியுரிமை பறிப்பு, 1956 தனிச்சிங்களச் சட்டம், பிறகு பல வருடங்கள் கடந்து பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் மற்றும் பதவி நியமனங்கள் உட்பட பல பாகுபாடான நடவடிக்கைகள் மூலமாக சுதந்திரம் பெற்ற நாளில் இருந்தே நாட்டில் விவாகரத்து இடம்பெற்றுவிட்டது.

பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி என்ற அடிப்படையில் அரசியலமைப்பு பேரவைக்கு பொருத்தமான உறுப்பினரின் பெயரை அறிவித்த போதிலும் கூட அந்த நியமனம் இன்னமும் செய்யப்படவில்லை.

மாகாணசபை தேர்தல்களுக்கு என்ன அவசரம் என்று ஜனாதிபதி கேட்கிறார். ஆட்சிமுறையின் பாகுபாடான நடவடிக்கைகளின் விளைவான வேதனைக்கு பிறகு வகுக்கப்பட்ட ஒரு ஏற்பாடே மாகாணசபைகள் என்பதை விளங்காதவராக அவர் பேசுகிறார்.

நாட்டில் என்ன பிரச்சினை என்றும் அவர்கள் கேட்கிறார்கள். பாராளுமன்றத்துக்கு அது தெரியவில்லைப் போலும். மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள் இருக்கிறதா என்றும் கேள்வி கிளம்புகிறது. வாழ்க்கை வழமை போன்று இருப்பதாகவே ஒரு தோற்றப்பாடு காட்டப்படுகிறது. டுபாய்க்கு பறந்து ஆகாயத்தில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

அதேவேளை பட்டினி கிடக்கும் மக்களின் தொகை அதிகரித்த வண்ணமே இருப்பதாக சர்வதேச அறிக்கைகள் கூறுகின்றன. விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்கள், உற்பத்தியாளர்கள் பல்வேறு இடர்பாடுளை எதிர்நோக்குகிறார்கள். பங்கீடுகளை விநியோகித்து திருப்பதிப்படுத்துவதற்கு அப்பால் அவர்களின் பிரச்சினை சென்றுவிட்டது.

மயிலத்தமடு - மாதவனைப் பிரச்சினை மேய்ச்சல் தரையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை மாத்திரமல்ல. அது ஆட்சிமுறை, மக்களின் உரிமைகள் (குறிப்பாக சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகள்), சமூகத்தில் சமத்துவத்தைப் பேணுவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் விருப்பம் மற்றும் ஆற்றலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையுமாகும்.

மக்களுக்கு நீதியையும் சமத்துவத்தையும் உறுதி செய்யக்கூடியதாக தீர்வுகளைக் காணக்கூடிய பிரச்சினைகளைக் கையாளுவதில் ஜனநாயகத்தின் தூண்களுக்கு (நீதித்துறை, நிறைவேற்று அதிகாரபீடம், சட்டவாக்க சபை) இருக்கக்கூடிய ஆற்றல் துரதிர்ஷ்டவசமாக நாளாந்தம் அருகிக்கொண்டே போகிறது போன்றே தெரிகிறது.

( பேராசிரியர் ஜெயசிங்கம் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்)